உ

சிவமயம்

பருத்தித்துறை கொட்டடி

# ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான





# சித்திரத்தேர் வெள்ளோட்ட
# சிறப்பு மலர்

23.02.2017

உ

சிவமயம்

# அருள் நிறைந்த



# பெரியபிள்ளையார்

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

பருத்தித்துறை கொட்டடிப் பதியில்

பல்லாண்டு காலம் சாந்நித்தியம்

பெற்று அருளாட்சிபுரியும்

பெரிய பிள்ளையாரின்

பாதக் கமலங்களில்

இந்நூல்

சமர்ப்பணம்.

| | | |
|---|---|---|
| நூல் | : | பருத்தித்துறை, கொட்டடி<br>ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான<br>சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர் |
| வெளியீடு | : | தேர்த் திருப்பணிச்சபை<br>பருத்தித்துறை, கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் |
| காலம் | : | துர்முகி வருஷம் மாசித்திங்கள் 11ம் நாள் வியாழக்கிழமை (23.02.2017) |
| பதிப்பகம் | : | சிவா ஓவ்செற் பிறின்ரேர்ஸ்<br>வியாபாரிமூலை,<br>பருத்தித்துறை. |

## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| மலராசிரியர் மனதிலிருந்து... | iv |
| ஆசியுரைகள் | v-xiv |
| வாழ்த்துரைகள் | xv-xxviii |
| ஆலய வரலாறு | 01-03 |
| விநாயக வழிபாடு | 04-09 |
| மஹோற்சவ தத்துவம் | 10-17 |
| இரதோற்சவம் | 18-23 |
| தேர்களின் அமைப்பும் தேரோட்டத் தத்துவமும் | 24-28 |
| அன்பின் வழியது உயர்வு | 29-32 |
| நன்றியுரை | 33 |

## மலராசிரியர் மனதிலிருந்து...

அகிலாண்ட கோடி பிரமாண்ட ரூப நாயகனாக விளங்கும் விநாயகப் பெருமான் கோயில் கொண்டு இப்பதியில் அடியவர்களுக்கு அருளாட்சி புரிகின்ற அழகுக் கோலத்தை இங்கு காண்கின்றோம்.

பெருமானின் அருளால் ஆலயத்தில் தேர்த் திருப்பணி முன்னெடுக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு அனைவரையும் உள்ளீர்க்கும் உருவப் பொலிவுடன் இன்று அழகிய சித்திரத்தேர் பவனி வருவதைக் காணும்போது எல்லார் மனமும் உவகையடைகின்றது. திருவருள் துணையுடன் திருநெல்வேலி அர்த்தநாரீஸ்வரர் சிற்பாலயத்தினர் இத்தேரை ஆக்கி உவந்தளித்துள்ளார்கள். அது இந்த துர்முகி வருடம் மாசித்திங்கள் பதினோராம் நாள் (23.02.2017) இனிதே கைகூடியிருக்கிறது.

இந் நன்னாளில் வெள்ளோட்ட மலர் ஒன்றையும் வெளியிட வேண்டும் என்ற விருப்பத்திற்கிணங்க இம்மலரானது புதுப் பொலிவோடு வெளியிட்டு வைக்கப்படுகிறது. இதனை ஆக்குவதற்கு ஆசியுரைகள் வழங்கிய சமயப் பெரியார்கள், வாழ்த்துரைகள் வழங்கிய சமூகப் பெரியவர்கள், கட்டுரைகளை ஆக்கிய அறிஞர்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகள்.

தொகுப்பாசிரியர்

**சைவப்புலவர் மாறன் ஐயா**

## மன்மத வருஷ மஹோற்சவம் - 2016
## நிகழ்வின் பதிவுகள்

பூங்காவன உற்சவத்தின் போது




இரதோற்சவத்தின் போது





சப்பற வெள்ளோட்டத்தின் போது



சுவாமி வீதியுலாவின் போது

# நல்லைக் குருமணியின் அருளாசி

திருக் கோயில்களாலும் கல்வி நிலையங்களாலும் பெருமை பெறுவது எமது புனித மண் ஆகும். இந்த வகையில் அமையப்பெற்ற பெரிய பிள்ளையார் ஆலயம் சிறந்து விளங்குகின்றது. கடவுள் நம்பிக்கை உடையோரும் கல்விமான்களும் இப்பதியை அன்றுதொட்டு இன்றுவரை அணி செய்கின்றனர். அத்துடன் இக் கோயிலின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பயபக்தியையும் ஒருசேர வளர்த்து வருகின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். நேரம் தவறாத ஐந்துகால பூசை, காலம் தவறாத சொற்பொழிவு இங்கு நடைபெறுவதை நான் கேள்விப்பட்டுள்ளேன். இங்கு வாழும் அன்பர்கள் "கூடும் அன்பினிலே கும்பிடவே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்குபவர்கள்" அவர்கள் அனைவரும் தேர் உற்சவ உபயகாரர்களுடன் இணைந்து பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் ஒன்றை அமைத்து வெள்ளோட்டம் காண்கிறார்கள். அனைவருக்கும் பெருமானின் திருவருள் பேரின்பம் கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லூர், யாழ்ப்பாணம்.

# ஆசிச் செய்தி

அலை பாயும் மனித மனங்களை அடக்கி ஒரு நிலைப்படுத்துவதற்கு ஆலய வழிபாடு அவசியமாகின்றது. அதன் பொருட்டு ஆலயங்களில் நித்திய பூஜை வழிபாடுகளும் அவற்றில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மஹோற்சவங்களும் நடாத்தப்பட்டு வருகின்றன. மஹோற்சவங்கள் இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பனவாக அமைகின்றன. அதில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிப்பதாக அமைகின்றது. அதாவது மனித மனங்களில் உள்ள மலங்களை அழிப்பதைக் குறிப்பதால் அது மகத்துவம் பெறுகின்றது. இதன் போது விஷேஷமாக அமைக்கப்பட்ட இரதத்தில் உற்சவ மூர்த்தியை ஏற்றி அலங்கரித்து ஊர்வலம் வருவது மரபு.

அந்தவகையில் பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலயத்தில் இரதோற்சவத்தின் பொருட்டு புதிதாக இரதம் உருவாக்கப்பட்டு அதன் வெள்ளோட்டம் இன்று 23.02.2017 வியாழக்கிழமை நடைபெறுவது சிறப்பாகும்.

நாம் தரிசிக்கும் விநாயகப்பெருமானுக்கு புதிதாக தேர் உருவாக்கி, மகிழ்விப்பதைப் போல், நம் உள்ளே உள்ள இறைவனுக்கும் நாம் தேர் உருவாக்கி மகிழ்விக்க வேண்டும். இங்கு தேர் என்பது நல்ல பண்பை அல்லது பழக்கத்தைக் குறித்து நிற்கின்றது. ஆகவே இதுவரை நம்மிடம் இல்லாத ஏதோவொரு பண்பையாவது இன்றிலிருந்து நமக்குள்ளே உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதை நாம் செய்தே ஆக வேண்டும்.

இவ் வெள்ளோட்டம், தொடர்ந்து நடைபெறவுள்ள இரதோற்சவம் ஆகியன சிறப்பாக நடைபெறவும் , இதனை முன்னிட்டு வெளிவரவுள்ள சிறப்பு மலர் நிறைவாக வெளிவரவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல கொட்டடி சித்திவிநாயகப் பெருமானையும் , பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.
வாழ்க் சீர் அடியாரெல்லாம்.

இறைபணியில்

**பிரமச்சாரி ஜாக்ரத சைதன்ய வதிவிட ஆச்சார்யார்**
சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.

# பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவை முன்னிட்டு சித்தாந்த சைவப்புலவர் ம.ச.வேதாரண்யக்குருக்கள் வழங்கிய ஆசியுரை

மேற்படி சித்திவிநாயகர் தேவஸ்தானச் சித்திரத்தேர் 23.02.2017 துர்முகி வருடம் மாசித்திங்கள் பதினோராம் நாள் வியாழக்கிழமை நிகழும் வெள்ளோட்ட விழாவை முன்னிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றனம். தேர்த் திருவிழாவானது இறைவனது ஐவகைத் தொழில், சம்காரத் தொழிலைக் குறிப்பதாகும். ஆகையால் இறைவன், ஆன்மாக்களான எம்மிடம் உள்ள மும்மலங்களையுஞ் சங்கரித்து, எமக்கு மெய்ஞானத்தைத் தந்து, வீடு பேறடையச் செய்யும் தத்துவத்தை விளக்குவதாகச் செய்வதே தேர்த் திருவிழாவின் கருத்தாகும். அத்தகைய தேரை விநாயகப் பெருமானுக்குச் செய்ய வேண்டுமென ஊக்குவித்த குருமாருக்கும் அத்தேரைச் செய்வதற்காகிய பொருளை உதவிய அன்பர்களுக்கும் அதனைச் சிறந்த சிற்ப வேலைகளுடன் ஆக்கி உதவிய சிற்பர்களுக்கும் ஏனைய மக்கள் அனைவருக்கும் விநாயகப்பெருமானின் பாத பத்மங்களைப் பணிந்து சீரும் சிறப்பும் செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென எமது நல்லாசிகளை வழங்குகின்றனம்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து.

**சிவஸ்ரீ ம.ச.வேதாரணியக்குருக்கள்**

# ஆசிச்செய்தி

ஈழத் திருநாட்டில் சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்து விளங்கும் பருத்தித்துறை புண்ணிய பூமியில் "பெரியபிள்ளையார்" என்று சிறப்பாக அழைக்கப்படும் பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் அருள்பாலிக்கிறார். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே இணைந்து சிறப்புடன் மிளிரும் இறைவன் தம்மை நாடி வரும் அடியவர்கட்கு வினைகளைத் தீர்க்கும் "சர்வவியாபி" யாக விளங்குகிறார். இத்தகைய சிறப்புக்கள் மிகுந்த விநாயகருக்கு துர்முகி வருடம் மாசித்திங்கள் - குரு வாரம் (23.02.2017) புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியுடன் எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் வேண்டி விழாச் சிறப்புற பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து

"சிவாச்சாரியமணி"

**பிரம்மஸ்ரீ சிவ வாசுதேவக்குருக்கள்**

பிரதமகுரு,

ஸ்ரீபத்திரகாளி சமேத ஆதிசிவ வீரபத்திரர் தேவஸ்தானம்,

வியாபாரிமூலை.

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுருவின் ஆசிச்செய்தி

மிகத் தொன்மை மிக்க பருத்தி மாநகர் கொட்டடிப் பதி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்திற்கு புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழாவும் அதனை ஒட்டி தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர் ஒன்றும் வெளிவருவதையிட்டு உவகையடைகிறேன். விநாயகர் அடியார்களின் அயராத முயற்சியிலும் சிவாச்சாரியார்களின் பக்தி பூர்வமான பூசையாலும் பரிபாலன சபையினரின் பணியாலும் கோவில் துரித வளர்ச்சி பெற்று வருவது பாராட்டுக்குரியது. திருக்கோவில்கள் புனிதமாகப் பேணப்படும்போது கிராமங்கள் புனிதமடையும். மக்கள் மனங்களில் புனித சிந்தனைகள் உருவாகும். திருக்கோவில்களின் சிறப்பும் விழாக்களும் மக்களை மாண்புறச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அந்த வகையில் அழகான சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு மக்களை ஆற்றுப்படுத்தும் திருத்தொண்டை வாழ்த்துகின்றேன். தேரை உருவாக்கிய சிற்பாசாரியார்களிற்கும் துணைசெய்த அனைவருக்கும் எனது நல்லாசிகளைக் கூறி அமைகிறேன்.

“வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்”

“சர்வே ஜனகா சுகினோ பவந்து”
“இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க”

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.**
இந்துமத குரு பீடாதிபதி,
அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்.

# அருளாசியுரை

'ஊர் கூடி தேர் இழுப்போம்' என்ற வாக்கியத்திற்கு உயிர் கொடுத்தாற் போல் பெரும் கலைப் படைப்புக்களின் வெளிப்பாடாகவும் கடினமான முயற்சியும் உயர்ந்த உழைப்பினாலும் உருவாகுவது சித்திரத்தேர் ஆகும். அந்த வகையில் இன்று வடமராட்சியில் பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகப் பெருமானிற்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதை அறிந்து நாமும் பெரு மகிழ்வடைகின்றோம். மனித வாழ்க்கையில் தேரோட்டமானது மகோ விகாரங்களை தவிர்த்து மனதில் இறைவனை இருத்தி பிறவிப் பெரும்பயனை நோக்கி மனதை ஒருவழிப்படுத்தி பயன் கருதாமல் கருமங்களை செய்கின்றவனுக்கு ஆத்மஞானம் என்றநிழற்பேறு கிடைக்கும் என்ற தத்துவத்தை விளக்குவது தேர்த் திருவிழாவாகும்.

இப்பெரு விழாவிற்கு தேவையான சித்திரத்தேரை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்த ஆலய குருமார்கள், அறங்காவலர்கள், உபயகாரர்கள், விநாயகப்பெருமானின் மீளா அடியவர்கள், கலைப் படைப்பாளர்கள் அனைவரிற்கும் கொட்டடி விநாயகப்பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும் என்று நாமும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.


ஆகம கிரியா ஜோதி, கிரியா கிரம விஷாரத

**சிவஶ்ரீ சதா மகாலிங்கசிவக்குருக்கள் J.P.**

பிரதமகுரு,

நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் ஆலயம்,

செயலாளர்,

அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை.

# தேரேறி அருள் தரும் பெரியபிள்ளையார்

எல்லாம் வல்ல பெரியபிள்ளையாரின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் எமக்குக் கிடைத்துள்ள மகா பாக்கியம். ஆலய குருக்கள், தேவஸ்தான பரிபாலனசபையினர், தேர்த்திருப்பணிச் சபையினர், தேர் உபயகாரர்களின் ஊக்கத்தினாலும், விடாமுயற்சியினாலும், அடியவர்களின் பங்களிப்பினாலும் இன்று அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த சித்திரத்தேர் ஆலய முன்றலில் அருட்பொலிவு தருகின்றது. சித்திரத்தேர் அமைப்போடு ஆலயம் புது மெருகு பெற்றிருக்கின்றது. சித்திரத்தேருக்கு பங்களிப்பு நல்கிய அனைத்து அன்பர்களுக்கும் பெருமானின் அருளாசி கிடைக்க பிரார்த்தித்து அமைகின்றோம்.

சிவாகம வித்தகர்
**சிவஸ்ரீ இ.பாலகிருஸ்ணக்குருக்கள்**
பிரதமகுரு,
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவில்,
கொம்மந்தறை, உடுப்பிட்டி.

# தேவஸ்தான பிரதம குருவின் ஆசியுரை

வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்தருளும் வேழமுகத்தவனான பெரிய சித்திவிநாயகப் பெருமானின் திருவருளுக்கு இணங்க அவரருட்பணி செய்யும் காலத்தில் புனித கைங்கரியமாகிய சித்திரத்தேர் திருப்பணி நிறைவு கண்டு அத்தேரில் பெருமான் பவனி வந்து இத் துர்முகி வருஷ மகோற்சவத்தை அலங்கரிப்பதையிட்டு யாம் மனநிறைவடைகிறோம். பெருமானின் திருவருள் நோக்கத்தினால் கடந்த இரண்டு ஆண்டுகளில் தேர்த்திருப்பணிச்சபை, தேர்த்திருவிழா உபயகாரர், பரிபாலனசபை முதலாய பலரது அர்ப்பணிப்பும், தயாள சிந்தை படைத்த எம் அடியவர்களின் அற்புதம் மிக்க நிதிப்பங்களிப்பும் இவற்றையெல்லாம் ஒருங்கிணைப்பு செய்து இப்பணி இடையில் தடைப்படாது பணியாற்றிய பெருமானின் அன்பர் திரு.மா.திருநீலகண்டன் ஐயா அவர்களின் உற்சாகமுமே அழகும் பெருமையும் பொருந்திய சித்திரத்தேர் ஒன்று உருவாக வழிசமைத்தது என்றால் அது மிகையில்லை.

இச்சித்திரத்தேருக்கான பவளக்கால் வைத்தல் நிகழ்வு, அச்சுத்தாபித்தல் மற்றும் தேர் கொட்டகைக்கான அத்திவாரமிடல் என்ற நிகழ்வுகள் எல்லாம் பெருமானின் திருவீதியுலா இடம்பெற்ற போது அவர் பார்வையில் நிகழ்த்தப் பட்டதனாலோ என்னவோ எத்தடையும் இல்லாதவாறு முழுமை பெற்றமை அவனருளுக்கு தக்க சான்று என்பதை யாம் பதிவு செய்கிறோம்.

பெரியபிள்ளையார் அருள் நிறைந்தவர். அற்புதமானவர். மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களோடு காலம் தவறாத ஐந்து காலப் பூசை நியமங்களை ஏற்று தன்னை நாடிவருகின்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் உய்வளிக்கும் தெய்வம். அவருக்கான மகோற்சவத்தின் சிறப்பு விழாவான தேர்த்திருவிழாவிற்காக ஏற்கனவே அமைக்கப்பட்ட சித்திரத்தேர் போர்க்கால சூழலினால் அழிவுற்ற பின்னர் அதனை உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் பலரது உள்ளத்திலும் தோற்றம் கண்டிருக்கின்றது. அது பிள்ளையாரின் திருவருளால் அப்போதைய தலைவராகிய திரு.விஜயரத்தினம் ஐயா அவர்களுக்கு கருக்கொள்ள அதனை திரு.மா.திருநீலகண்டன் ஐயா அவர்களும் அவரது உறவினர்களும் செயல்வடிவம் கொடுத்து நிறைவேற்றியுள்ளார்கள்.

அடுத்து இப்பெருங் கைங்கரியத்தை பொறுப்பேற்று முழுமனதோடும், பேரார்வத்தோடும், தூய்மையாகவும் சித்திரத்தேருக்கு உருவம் கொடுத்த திருநெல்வேலி காளிகோவிலடியைச் சேர்ந்த சிற்பக்கலா வித்தகர் விஸ்வப் பிரம்மஸ்ரீ

பொறுப்பேற்ற திரு.அரசரத்தினம் அஜந்தன் குழுவினரும் போற்றப்பட வேண்டியவர்கள். தங்களின் கலை வண்ணத்தை பிள்ளையாரின் அருள் வண்ணமாக்கிய அப்பேராளர்கள் வாழ்க. இத் தெய்வீகப் பணிக்கு முன்னின்று உழைத்த பரிபாலன சபையினர், தேர்த்திருப்பணிச் சபையினர், நிதிப்பங்களிப்பு செய்த பெருமானின் அடியவர்கள், உற்சவ உபயகாரர்கள், சிற்பாச்சாரியார்கள், தேர் கொட்டகை அமைத்த கலைஞர்கள் எல்லோருக்கும் எம்பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து அவரின் நல்லாசிகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மன நிறைவடைகிறோம். எங்கும் மங்கலம் உண்டாகட்டும்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து.

ஆலய பிரதமகுரு
**சைவப்புலவர் சிவஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள்**
**திருமாறக்குருக்கள்**
(ஆசிரியர்)

# வடமராட்சி பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவை முன்னிட்டு மஹோற்சவ குரு சிவ பிரதீபக்குருக்கள் அவர்களால் மனமுவந்து அளித்த ஆசியுரை

இந்து மாசமுத்திரத்தின் முத்தாக விளங்கும் வடமராட்சி பருத்தித்துறைப் பதியில் பல்லாண்டு காலம் கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி புரியும் கொட்டடி சித்திவிநாயகப் பெருமானுக்கு ஒரு சித்திரத் தேரை உருவாக்க எண்ணி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஊர்மக்களும், ஆலய நிர்வாகத்தினரும், தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர் திரு.பத்மநாதன் சுரேந்திரன் (இந்திரன்) குழுவினர்க்கும் சித்திவிநாயகப் பெருமான் திருவருள் துணை நிற்க என்றென்றும் வாழ்கவென வாழ்த்தி அமைகின்றனம்.

நன்றி

**சிவஸ்ரீ சிவ பிரதீபக்குருக்கள்**

(பிரதமகுரு புதுக்குளங்கரை பரம விநாயகர் ஆலயம்)

# வாழ்த்துச் செய்தி

"ஒற்றையணிருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழி மூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதும்
கொண்டைக்கால் வராது கூற்று"

இந்து சமயத்திலே சகல கிரியைகள், பூஜைகள், வழிபாடுகள் என்பவற்றில் முதல் கடவுளாகப் போற்றப்படுபவர் விநாயகப் பெருமான். விநாயகப் பெருமானை வணங்காமல் தொடங்கும் பணிகள் தடைப்படும் என்பது எமது ஐதீகம். இந்து சமயத்தில் இதற்கு பல புராணக் கதைகள் உண்டு.

முதல் வணக்கத்துக்குரிய பிள்ளையாருக்கு ஈழவழ நாட்டிலே பல தலங்கள் உண்டு. அதில் ஒன்றே யாழ் மாவட்டத்தின் பருத்திதுறை நகரில் அமைந்த கொட்டடிப் பிள்ளையார் ஆலயமாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக போரின் கோரப்பிடியில் சிக்கித்தவித்த இந்நகரின் மக்கள் பல்வேறு சிரமத்தை எதிர்கொண்டதுடன் ஒரு கட்டத்தில் தமது குடியிருப்புக்களைவிட்டு இடம் பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இவ் ஆலயம் கவனிப்பார் இன்றி பாழடைய நேர்ந்தது. இராணுவமுகாம் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்தாலும் ஆலயத்தின் கட்டட அமைப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படவில்லை. எனினும் போர் சூழல் தணிந்து மக்கள் மீள்குடியேறி சக வாழ்வு வாழத் தொடங்கிய பின் அவ்வூர் பக்தர்களால் ஆலயத்தின் இராஜகோபுரம் உட்பட அனைத்தும் புனரமைப்பு செய்யப்பட்டு அதிக செலவில் சித்திரத் தேரும், தேர் முட்டியும் நிர்மாணிக்கப்பட்டு எதிர்வரும் 23.02.2017 அன்று தேரின் வெள்ளோட்டம் இடம் பெறுவதையிட்டு வெளியிடவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆலயங்கள் பூஜை வழிபாட்டுடன் நின்றுவிடாமல் சமூக சேவைகளிலும் ஈடுபடல் வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

அதற்கிணங்க பாடசாலை மாணவர்களை ஒன்றுதிரட்டி ஆலய நிர்வாகத்தின் சிவ தொண்டர் அணியொன்றினை உருவாக்க வேண்டும். அத்துடன் ஆலயத்தின் பெயரால் அறநெறிப்பாடசாலைகள் அமைக்கப்பட்டு நடாத்தப்படல் வேண்டும். இவ்வாறான சமய மற்றும் சமூக நடவடிக்கைகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் முழுப் பங்களிப்பையும் அனுசரணையையும் வழங்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதன் மூலம் இந்துப்பாரம்பரியம் நிறைந்த எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க முடியுமென்பது எமது நம்பிக்கை.

எனவே பருத்தித்துறை கொட்டடி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற நடைபெறவும், அதனையிட்டு வெளியிடப்படவுள்ள சிறப்பு மலர் வெற்றிகரமாக அமையவும் முதல் கடவுளாகிய விநாயகரைப் பணிவதுடன் ஆலய நிர்வாகத்தினர் ஆன்மீக பணிகளுக்கு மேலாக சமூக சேவைகளிலும் ஈடுபடல் வேண்டுமெனவும் இந்த ஆலயத்தில் சிவ தொண்டர் அணி அமைத்து இளம் சமுதாயத்தை ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுத்தவும் கேட்டு நிறைவு செய்கின்றேன்.

இறைபணி நிற்க!

**திரு.கந்தையா நீலகண்டன்**
தலைவர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்.

# ஸ்தபதியின் வாழ்த்துச் செய்தி

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகரின் அருட் பாதாரவிந்தங்களைப் பரவிப்பணிந்து....

ஸ்ரீ தட்சண கைலாசம் என்று போற்றப்படும் ஈழவள மணித்திருநாட்டின் வட திக்கிலமைந்துள்ள வடமராட்சி, பருத்தி மாநகரிலே கொட்டடிப்பதியில் குடிகொண்டு எழுந்தருளி அருளாட்சி புரியும் பெரியபிள்ளையாருக்கு பல கலையம்சத்துடன் கூடிய சித்திரத்தேர் செய்யப்பட்டு அஃது இன்று வெள்ளோட்டமிடப்படுவதையிட்டு யாம் பெருமகிழ்வு அடைகின்றோம். பிள்ளையாரின் அருளை அண்மையிலே அறிந்து கொண்ட யாம் அவரால் பூரணமாக ஆட்கொள்ளப்பட்ட நிலையில் ஆலயம் ஒவ்வொரு கணமும் வளர்ச்சியடைவதைக் கண்டு புளகாங்கிதம் அடைகின்றோம்.

இந்த மங்கலகரமான துர்முகி வருஷத்தில் பெரும்பாலான ஆலயங்கள் உயர்ச்சியைக் கண்டு வளர்ந்து கொண்டு இருப்பது, இத்துணை இடர்களுக்கு மத்தியிலும் சைவப் பெருமக்களாகிய நாம் பெற்ற பாக்கியம் ஆகும். அந்தவகையிலே இத்தேவஸ்தானத்தில் இடம்பெறும் முன்னேற்றகரமான வேலைகளை யாம் பாராட்டுகின்றோம்.

இந்த முப்பத்திநான்கு அடி உயர சித்திரத்தேரை ஆக்குவதற்காக வடமராட்சி வாழ் சைவப்பெருமக்கள் குறிப்பாக பிள்ளையாரின் உறைபதியைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழும் அடியார்கள் பெரும் பங்களிப்பை செய்துள்ளார்கள் என அறிகின்றோம். அந்த பங்களிப்பை பாராட்ட சொற்களே போதாது. தேவைகளை உணர்ந்து அவ்வப்போது எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் அவற்றை நிறைவேற்றிவரும் ஆலய பரிபாலன சபையினரையும் குறிப்பாக திருப்பணி வேலைகளில் ஈடுபடும் திருப்பணிச் சபையினரையும் இந்த செய்தியின் மூலம் பாராட்டுவதிலும், வாழ்த்துவதிலும் யாம் பெரும் மகிழ்வடைகின்றோம்.

பெரியபிள்ளையாரின் அருட்கடாட்சம் அனைத்து மக்களுக்கும் குறிப்பாக பிள்ளையாரின் அடியிலிருக்கும் பக்த கோடிகளுக்கும் பொழிய வணங்கி ஆலயம் மேலும் வளர்ந்து செழித்து எழில் பெற்று சிறக்க வாழ்த்துகின்றோம்.

பிள்ளையாரின் அருளினால் அமைக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற எல்லாம்வல்ல சர்வலோக நாயகனின் அனுக்கிரகத்தை வேண்டி அடியேனுடன் இப்பணியில் ஈடுபட்ட அனைத்து அன்பர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றோம்.

நன்றி

ஸ்தபதி
கலாவித்தகர் விஸ்வப்பிரம்பஸ்ரீ
**பத்மநாதன் சுரேந்திரன்**

# தேர்த் திருப்பணிச்சபைப் பொருளாளரின் வாழ்த்துரை

பருத்தித்துறை துறைமுகத்திற்கு மிக அருகாமையில் சர்வ சித்திகளையும் வழங்கும் சித்திவிநாயகர் ஆலயம் ஒல்லாந்தர் காலத்திற்கு முன்பிருந்தே அமைக்கப்பட்டது. இவ்வாலயம் பெரிய வீதிகளை உள்ளடக்கியதாக உள்ளமையினால் பெரிய பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்றது. ஆலயத்தை சுற்றி உள்வீதியும், இரண்டாம் வீதியில் தீர்த்தக் கேணியும் பூந்தோட்டமும், மூன்றாம் வீதியில் தெற்பக்குளமும் அழகாக அமைந்துள்ளன. இவ்வாலயத்தின் இராஜகோபுரம் 1925 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு இராஜ கம்பீரத்தோடு இவ்வாலயத்தின் சரித்திர சான்றாக எழுந்துநிற்கிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் தேர் எரிக்கப்பட்டதுடன் நித்திய பூசைகள் தடைப்பட்டன. இதன் காரணமாக 2011 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்த பின்னர், ஒவ்வொரு ஆண்டு திருவிழாக்களும் கட்டுத்தேரின் உதவியுடன் இனிதே நடந்தேறின.

பிள்ளையாரின் திருவருளின் மூலம் சித்திரத்தேர் அமைப்பதற்கு ஊர் மக்களின் ஒற்றுமையான வேண்டுதலின் பேரில், தேர்த்திருப்பணிச்சபை நிறுவப்பட்டது. விக்கினேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சத்தினால் இப்பகுதியில் வாழும் இந்து மக்களுக்கு கிடைத்துள்ள பெரும் பேறினால் சித்திரத்தேர் நிறுவப்பட்டுள்ளது. தேர்த்திருப்பணி செயற்பாட்டுக்கு அனைத்து மட்டத்திலிருந்தும் ஆதரவும் நிதி உதவிகளும் கிடைத்தன. அனைவரது உதவி, ஒத்தாசை, எமக்கு கிடைத்த பேராதரவு மனமகிழ்ச்சியைத் தந்தது மாத்திரம் அல்லாது, இப்பகுதியில் பிறந்து பிள்ளையாரின் திருவடியை வணங்கி வாழ்ந்த எமது முன்னோர்களுக்கும் அடியேனுக்கும் கிடைத்த பெரும் பேறாகும்.

இத்திருப்பணியுடன் தொடர்புடைய அனைவருக்கும், இவ்வாலயத்தில் வழிபடும் பக்தர்களுக்கும், பருத்தித்துறை வாழ்மக்களுக்கும், நாட்டுக்கும் கொட்டடி பெரிய பிள்ளையாரின் சித்தியுடன் கூடிய கருணைப் பேரருள் பொழிய வேண்டும் என மனமார பிரார்த்திக்கிறேன்.

சித்திவிநாயகர் பாதம் பணிந்து வாழ்த்தி வணங்குகிறேன்.

**திரு.மார்க்கண்டன் திருநீலகண்டன்**
பொருளாளர்,
தேர்த்திருப்பணிச் சபை.

# வாழ்த்துச் செய்தி

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவையின் அருள்மொழிக்கேற்ப ஈழவள நாட்டின் மகுடம் போலத் திகழும் பருத்தித்துறையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு கோலாகலமாக நடந்து சிறக்க வாழ்த்துவதிலும் பேருவகை அடைகிறேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைக் கொண்டு பருத்தித்துறை துறைமுகத்திற்கு அருகில் அமைந்துள்ள இவ் ஆலயம் பெரிய வீதிகளைக் கொண்டமைந்தமையால் "பெரிய பிள்ளையார் கோயில்" எனவும் சிறப்புப் பெற்றது. இற்றைக்கு முந்நூற்றைம்பது வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்த இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்திற்கு முன்பே இவ்விடத்தில் தோன்றியது எனவும் அப்போது ஒருசிறிய கேணியும் ஆலயமும் இருந்ததாகவும் அக் கேணியில் ஸ்நானம் செய்து விநாயகப் பெருமானை வழிபட்டே மக்கள் துறைமுக வேலைக்கு செல்வார்கள் எனவும் வரலாறு பெருமையுடன் கூறுகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் இவ்வாலயம் அழிக்கப்பட மக்கள் இந்தியாவிலிருந்து ஒரு விநாயகரைச்செய்து சொரிநெல்லுள் வைத்துக் கொணர்ந்தனர். இவ் விக்கிரகத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் பனங்கட்டிக் கொட்டினுள் வைத்து வணங்கினர். அதனால் "கொட்டடிப் பிள்ளையார்" என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்படலாயிற்று.. 1870ல் கொடித்தம்பம் வைக்கப்பட்டுக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 1925ல் இராஜகோபுரம் கட்டி பூர்த்திசெய்யப்பட்டது.

ஆலயத்தின் கோபுரத்தின் இரு மருங்கிலுமுள்ள காண்டா மணிகளின் ஓசை பலமைல்களுக்கு அப்பால் கேட்கக் கூடியது. ஆலயத்தைச் சுற்றி உள்வீதியும் இரண்டாம் வீதியில் தீர்த்தக் கேணியும் மூன்றாம் வீதியில் தெப்பக் குளமும் அமைந்துள்ளன. ஆண்டு தோறும் மாசி மாதத்தில் வரும் அபரபக்கத்துச் சஷ்டி திதியில் நடைபெறும் உற்சவத்தில் தெப்போற்சவம் முக்கியமானதாக விளங்குகிறது. இவை இவ் ஆலயத்தின் தனித்தன்மைகளை எடுத்தியம்புகின்றன.

அன்று பனங்கட்டிக் கொட்டுக்கள் வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே இன்று வானளாவிய கோபுரத்தோடு அகன்ற தேரோடும் வீதிகளை உடைய ஆலயம் நிமிர்ந்து நிற்கிறது.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களாகிய உயிர்கள் முத்தி இன்பத்தை அடையும் பொருட்டு திருவருளை வாரி வழங்கிவரும் விநாயகப் பெருமானுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் பொற்குடத்திற்கு பொட்டு வைத்தாற்போல் சிறப்பை தரும் என்றால் மிகையில்லை. இச் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டிப் பணிகின்றேன்.

**திரு.இ.த.ஜெயசீலன்**
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
பருத்தித்துறை.

# பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துரை

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான தேர் வெள்ளோட்டத்தையொட்டி இவ்வாழ்த்துரையை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

பெரியபிள்ளையார் பலவருடங்களாக எழுந்தருளி உலாவந்த தேர் பலவீனப்பட்டதால் அடியார்களினால் மனங்கொள்ளப்பட்டுவந்த திருத்தேர்ப்பணி சிற்பகலா வித்தகர் விஸ்வப்பிரம்மஸ்ரீ பத்மநாதன் சுரேந்திரன் (இந்திரன்) அவர்களின் கைவண்ணத்தால் சிறப்புற நிறைவெய்துகிறது. தேர் வெள்ளோட்டம் 23.02.2017 ஆம் திகதி இடம்பெறுகிறது. சிறப்பான இப்பணி அடியார்களின் குறையை நீக்குவதாக அமைகின்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் மக்கள், சைவப் பெருங்குடியினர் மனங்கோணாது வழங்கிவரும் பொருள் உழைப்பு உதவி இதற்கு உறுதுணையானது.

இவ்வாலயம் வடமராட்சியில் முக்கியமாக விளங்கும் ஆலயங்களுள் ஒன்றாகவிருக்கிறது. பிள்ளையாரின் அருள்வேண்டி பலபகுதிகளிலிருந்தும் அடியார்கள் இத்தலத்துக்கு வருகை தருகின்றார்கள். எழில்மிகு சூழலில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரின் தரிசனத்தைப் பெற்று ஆன்மீக திருப்தியடைகின்றார்கள். ஆலய மகோற்சவங்கள் அடியார்களை வெகுவாக வந்து திரளச் செய்கின்றன.

ஆலய பரிபாலன சபையினரதும், திருப்பணிச் சபையினரதும் அயராத முயற்சி இத்திருத்தேர்ப்பணி நிறைவெய்த உறுதுணையானது. இவ்வேளையில் இம்முயற்சியில் பங்குகொள்ளும் யாவருக்கும் எனது மகிழ்வையும் தெரிவித்து இவ்விழா சிறக்க வாழ்த்துகின்றேன்.

**திரு.ப.சுரேஸ்**<br>
(ஆசிரியர்)<br>
தலைவர்,<br>
கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான<br>
பரிபாலனசபை.

# பரிபாலனசபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

இலங்கை வளநாட்டிலே இலங்கையின் தலை என அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி பருத்தித்துறைப் பதியினிலே எண்திசையும் அருள்பாலிக்கும் கொட்டடி சித்திவிநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திரத்தேரினிலே எம்பெருமான் சித்திவிநாயகர் வலம் வந்து அருள் பாலிக்கும் காட்சியைப் பார்க்க இருக்கிறோம். கடந்த கால யுத்தத்தினால் கருகிச் சாம்பலான எம்பெருமானின் சித்திரத்தேர் எப்போ உருவாகும் என எண்ணி நாம் இருக்கையிலே எம்பெருமான் அருளொன்று திருநீலகண்டன் எனும் அடியவரின் மனதில் பதிந்தது. அன்றிலிருந்தே முடிவெடுத்து ஆலய பரிபாலன சபையினருடனும் ஆலய பிரதம குருவுடனும் கலந்தாலோசித்து சித்திரத்தேர் உருவாவதற்காய் தேர்த்திருப்பணிச் சபையும் ஒன்று உருவாக்கப்பட்டு திருநீலகண்டன் ஐயா இரவுபகல் பாராது இன்முகத்துடன் உழைத்து வெளிநாட்டிலுள்ள அடியவர்க்கும் எம்மண்ணிலுள்ள அடியவர்க்கும் இதை எடுத்துரைத்து இத் தெய்வப் பணிக்கு ஊன்றுகோலாக செயற்பட்டார்கள்.

போர்த்துக்கேயர் காலத்திற்கு முந்திய காலத்திலே இவ்வாலயம் உருவாகி தற்போது இருக்கும் இடத்திலேயே சிறிய ஆலயமும் கேணியும் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. நவீன வசதிகள் அற்ற பண்டைய காலத்திலே அதாவது கடல் கடந்து தமிழன் கப்பலோடும் காலமதில் சம்பான்காரரும் தண்டயல்மாரும் ஏனைய கப்பல் தொழிலாளர்களும் கொட்டடிப் பிள்ளையாருக்கு விஷேட பூசை செய்து வழிபட்ட பின்னர்தான் தங்கள் கப்பல் பயணத்தை ஆரம்பிப்பார்கள். போர்த்துக்கேயர் ஆட்சி செய்த இறுதிக் காலத்தில் இக்கோயில் இடிக்கப்பட்டதாகவும் மூலவிக்கிரகம் அழிக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. பின் ஒல்லாந்தர் காலத்தில் இப்பிரதேச கப்பல் முதலாளிமார் நெல்வியாபாரத்திலும் பருத்திநூல் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். அக்காலப்பகுதியில் ஒல்லாந்தரும் எமது சமயத்தையும் வழிபாட்டையும் வெறுத்த காலமதில் இந்தியாவில் இருந்து ஒரு சிறிய கருங்கல் விநாயகர் விக்கிரகத்தை சொரி நெல்லுக்குள் மறைத்துவைத்து இங்கு கொண்டுவந்தனர். இதை அறிந்த ஒல்லாந்து சுங்க அதிகாரிகள் சோதனை பலமணிநேரம் செய்தும் கண்டு பிடிக்கமுடியவில்லை. பின்னர் அந்தப் பிள்ளையார் விக்கிரகம் எமது ஆலயம் இருக்கும் இடத்திலே ஒல்லாந்தருக்கு தெரியாமல் நெல் கொட்டுக்குள்ளே வைத்து பிரதிஷ்டை செய்து மறைமுகமாக வணங்கி வந்தனர். இதனால் கொட்டடிப் பிள்ளையார் என்று பெயர் பெற்றது இவ் ஆலயம் ஆகும்.

இத்தேரை அமைக்கும் பணியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கலைஞர்கள் பத்மநாதன் சுரேந்திரன் (இந்திரன்) குழுவினரும் இந்தியாவைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் இளங்கோவன் அவர்களும் சிறப்புற சிற்ப வேலைகளைச் செய்து தேரை அம்சமாக அமைத்துள்ளனர். அவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மேலும் தேரின் அண்ட சொருபத்திலுள்ள நான்கு சக்கரங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களைக் குறிக்கின்றது. இந்த நான்கு படிகளில் ஒன்றில்தான் ஆன்மாக்கள் உருள்வன ஆகும். எனவே ஆன்மாக்கள் இறைவனை வழிபட்டு நான்கு மார்க்கங்களில் ஒன்றைப் பின்பற்றி இறைவனை அடைவதற்கான வழியினைப் பின்பற்றுதல் வேண்டும்.

ஊர்கூடித் தேர் இழுப்போம் வாரீர். ஊர் கூடும் போது ஒற்றுமை பலப்படுகின்றது. ஒற்றுமையாகச் செயற்படும் போது பாரிய நிறைகளையும் இலகுவில் அசைக்கும் உண்மையும் விளங்குகின்றது. எனவே பக்த அடியார்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஊரையும் கோயிலையும் முன்னேற்றுவோம் வருக, வருக.

மேலும் பல்வேறு தத்துவங்களையும் பெருமையையும் கொண்ட சித்திரத்தேரை உருவாக்க திருவுளம் கொண்ட சித்திவிநாயகருக்கு சிற்ப சாஸ்திர முறைப்படி அமைத்துக் கொடுத்த சிற்பக் கலைஞர்களுக்கும் அன்பளிப்பு செய்த மெய்யடியார்களுக்கும் வழிகாட்டிய குருமார்களுக்கும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய தொண்டர்களுக்கும் தேர்த்திருப்பணிச் சபையினருக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும் முன்னின்றுழைத்த அனைவருக்கும் விநாயகப் பெருமானின் ஆயுள், ஐஸ்வர்யம், தானியம், புகழ், சகல சௌபாக்கியமும் கிடைக்க எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் அருள்பாலிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.

**திரு.சீ.புஸ்பராசா.**
(ஆசிரியர்)
செயலாளர்,
கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான
பரிபாலனசபை.

# பரிபாலனசபைப் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

'ஊர் கூடித் தேர் இழுப்போம்'

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பருத்தித்துறை கொட்டடிப் பதியில் அமர்ந்து அருளாட்சி புரியும் ஆனைமுகப் பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் அமையப்பெற்று ஆனந்த விழாக் காணுகின்ற இந்நன்னாளில் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றோம். தேர் உற்சவ உபயகாரர்கள், ஆலய பிரதம குருக்கள், தேர்த்திருப்பணிச் சபையினர், தேவஸ்தான பரிபாலன சபையினர் ஆகியோரின் அயராத முயற்சியினாலும், ஊக்கத்தினாலும் அடியார்களின் பங்களிப்பாலும் அமையப்பெற்ற சித்திரத்தேரில் பவனிவரும் விநாயகப்பெருமானின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.க.மாசிலாமணி**
பொருளாளர்,
கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான
பரிபாலனசபை.

# வடமாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளரின் வாழ்த்துரை

பருத்திநகரின் மையத்தில் அமர்ந்திருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கொட்டடி சித்திவிநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டத்தினை முன்னிட்டு ஆலய அறங்காவலர் சபையினரால் வெளியிடப்படும் சிறப்புமலருக்கு வாழ்த்துரை வழங்குவதற்கு கிடைத்த இறைஅருளுக்கு எனது பாதம் பணிந்த நன்றிகள்.

நீண்ட வரலாற்று தொன்மையும் பண்பாட்டு பாரம்பரியங்களையும் சைவநெறி தவறாத வாழ்வியல் முறைமைகளையும் கொண்ட இவ்வாலயம் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் நெருக்கீடுகளுக்கு உட்பட்ட காலத்தை மீட்டுப்பார்க்கின்றேன். 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை இவ்வாலயம் யுத்த சூனியப்பிரதேசம், உயர் பாதுகாப்பு வலயம் என்ற சட்டக்கோட்பாட்டுக்குள் முடக்கப்பட்ட ஆலயமாக இருந்த வரலாற்றுக் காலத்தை மறந்துவிட முடியாது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் அழிவுக்குட்பட்டபோது இவ்வாலயமும் அழிந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. இவ்வழிவை தாங்க முடியாத இவ்வூர் மக்கள் இந்தியாவில் இருந்து சிறிய விநாயக விக்கிரகத்தை சொரிநெல்லுப் பொதிக்குள் மறைத்து வைத்து பருத்தித்துறை துறைமுகத்தினூடாக பலத்த சுங்க சோதனைகளுக்கு மத்தியில் எடுத்து வந்ததாக வரலாற்றுச் சான்றுகள் அமைந்துள்ளன. இவ் விநாயக விக்கிரகத்தை பனங்கட்டி கொட்டுக்குள் வைத்து பிரதிஷ்டை செய்து வணங்கிவந்ததாகவும் இதனால் விநாயகப்பெருமானுக்கு கொட்டடிப்பிள்ளையார் என்ற வரலாற்று நாமம் அமையப்பெற்றதாக சான்றுகள் கூறுகின்றன. இச் சிறிய விநாயகப்பெருமான் இன்றும் ஆலயத்தின் தீர்த்தக்கேணியின் தென்திசையில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அருகில் இருந்து இறை அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்பு பெற்றுள்ளதுடன், அகன்ற மூன்று பெரிய வீதிகளையும் கொண்டிருப்பதால் பெரியபிள்ளையார் என்ற திருநாமத்தையும் பெற்று அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

பருத்தித்துறை நகரத்தின் அடையாளமாகவும் பொருளாதார மையமாகவும் வரலாற்றுச் சான்றாகவும் திகழ்கின்ற பருத்தித்துறை துறைமுகம் 400 வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்த இயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகத்தினூடாக வியாபாரம் மேற்கொண்ட வியாபாரிகளும் வர்த்தகர்களும் மாலுமிகளும் இவ்வாலயத்தின் தீர்த்தக்கேணியில் நீராடி விநாயகனை வழிபட்டபின்பே தமது பணிகளை தொடங்கியதாக சான்றுகளில் இருந்து அறியமுடிகின்றது.

1925 ஆம் ஆண்டு இந்தியக் கட்டிடக் கலைஞர்களால் நுட்பமாகவும் கவர்ச்சியாகவும் அழகாகவும் கட்டப்பட்ட இராஜகோபுரம் இன்றும் நகரின் மத்தியில் நிமிர்ந்து நகருக்கு அழகு சேர்ப்பது விநாயகனது கருணையேயாகும். ஆலயத்தின் மூன்றாம் வீதியில் தெற்குப்புறமாக அமைந்துள்ள தெப்பக்குளம் ஆலயத்தின் கலாசார தொன்மையை காட்டிநிற்கின்றது.

ஆலயத்தின் நீண்டநாள் தேவையும் அடியார்களது விருப்பமும் நிறைவுபெறுகின்ற இந்நாளில் அழகிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உள்நாட்டில் வாழும் அடியார்களாலும் புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகளாலும் வழங்கப்பட்ட 12.5 மில்லியன் நிதி மூலம் அழகிய சித்திரத்தேரும் தேர்த்தரிப்பிடமும் இன்று விநாயகனது கிருபையால் நிறைவுபெற்றுள்ளமை ஆலயத்தின் வரலாற்றுச் சான்றாக அமைந்துள்ளது. இவ் இறைபணிக்கு உழைத்த அனைவருக்கும் விநாயகன் கிருபை கிடைக்க வேண்டுகின்றேன்.

இவ் அழகிய சித்திரத்தேரை கலை நுணுக்கங்களுடனும் சாஸ்திர முறைப்படியும் விரைவாகச் செய்து முடித்த ஆச்சாரிய பெருந்தகைகளுக்கும் எனது வாழ்த்துக்கள். இந் நற்பணியை செய்து முடிப்பதற்கு அயராது உழைத்த ஆலய அறங்காவலர் சபைக்கும் ஆலய தொண்டர்களுக்கும் நிதி உதவி வழங்கிய உள்ளூர், புலம்பெயர் தேசத்து உறவுகளுக்கும் விநாயகன் கிருபை கிடைக்க வேண்டுகின்றேன்.

**திரு.சி.நந்தகுமார்**
உதவிச் செயலாளர்
மாகாணக் கல்வி அமைச்சு
வடக்குமாகாணம்.

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

பன்னெடுங்காலமாகப் பருத்தித்துறை நகரினைத் தன் பேரருட்பிரவாகத்தினால் காத்துப் பரிபாலித்து வரும் பெரியபிள்ளையார் என அனைவராலும் செல்லமாக அழைக்கப்பட்டு வரும் கொட்டடி சித்திவிநாயகர் ஆலயத் தேர்த் திருப்பணிச் சபையினால் அழகுற நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட வைபவத்தினை யொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழத்துச் செய்தி வழங்குவதற்கு அடியேனுக்கும் திருவருள் பாலித்தமையையெண்ணி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருப்பாதங்களை வழுத்தி வணங்குகிறேன்.

பிள்ளையாரை வணங்கியே எக்கருமத்தினையும் தொடங்குதல் பழந்தமிழர் மரபு. அக்காலத்தில் துறைமுக நகரான பருத்தித்துறையின் அபிவிருத்தியில் பெரும்பங்கு வகித்த வணிகப் பெருந்தகையான நாகலிங்க முதலியார் அவர்கள் இவ்வாலய உருவாக்கத்தோடும் திருப்பணிகளோடும் பின்னிப்பிணைந்திருந்தார். பல பாய்க்கப்பல்களைக் கொண்டிருந்த அவர்தம் கடல் வாணிபத்தின் இலாபத்தின் ஒரு பகுதி இவ்வாலயப் பரிபாலனத்துக்கென ஒதுக்கப்பட்டிருந்தமை இவ்வாலய வரலாற்றிலிருந்து அறியக்கிடக்கின்றது. நெல் அளக்கப் பயன்பட்ட கொட்டினுள் வைக்கப்பட்டு இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்து இவ்வாலயம் அமைக்கப்பட்டமையால் கொட்டடி சித்திவிநாயகர் என்ற பெயர் உருவாயிற்றென, இவ்வாலயங் குறித்த கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது.

ஓர் ஆலயத்துக்குரிய சகல அம்சங்களோடும் அதாவது, கோபுரம், வீதிகள், கேணிகள் உட்பட பருத்தித்துறையில் முதன்முதல் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் இதுவேயாகும். மேலும், இலங்கைத் திருநாட்டிலேயே, தெற்பத் திருவிழாவுக்கெனத் தனியான குளமொன்றினைக் கொண்டிருக்கும் ஒரேயொரு ஆலயம் இதுவேயாகும்.

சைவத்தையுந் தமிழையுங் காப்பதிலும் இவ்வாலயத்தின் பணி சிறப்புற்றுக் காணப்பட்டது. இவ்வாலயத்தின் அருகில் அமைந்துள்ள பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் பெயர், இவ்வாலயத்தின் பெயரிலிருந்தே உருவாகியது. இந்தியாவிலே சிதம்பரத்திலே சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றை அமைப்பதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் முயன்றபோது, அதற்கு அங்குள்ள எவரும் உதவ மறுத்தபோது, அவர் இவ்வாலயத்துக்கு வந்து இங்குள்ள வணிகப் பெருமக்களைக் கூட்டி உதவி கேட்டதாகவும் அவர்கள் மனமுவந்தளித்த பெருங்கொடையாலேயே அப்பாடசாலை அமைக்கப்பட்டதாகவும் இவ்வாலய வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது.

அழகிய மரச்சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்த அரும்பெரும் பொக்கிஷமான இவ்வாலயத் தேர் இராணுவ நடவடிக்கையால் அழித்தொழிக்கப்பட்ட போதும் சற்றும் மனந்தளராது, எரித்த சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைபோல மீண்டும் அழகிய சித்திரத்தேரைப் பெரும்பொருட் செலவில் உருவாக்கி வெள்ளோட்டம் விடும் தேர்த்திருப்பணிச் சபையினருக்கும் பக்த அடியார்களுக்கும் சிரந்தாழ்த்தி நன்றி செலுத்துவதுடன் இவ்விழா தடையின்றிச் சிறப்புடன் நடைபெற எல்லாம்வல்ல விநாயகப்பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு.கு.பிறேமகாந்தன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
(நிர்வாகம்)
வடமாகாணம்.

# வாழ்த்துரை

இந்து சமுத்திரத்தின் முத்து என வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் ஈழமணித் திருநாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தோங்கிட வழிவகுத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த யாழ்ப்பாணம் என்னும் திருநகரத்தில் திருவும் கல்வியும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இடம் வடமராட்சி ஆகும். இவ் வடமராட்சி பகுதியினது வடக்கில் பாக்கு நீரிணையும் கிழக்கில் வங்காள விரிகுடாவையும் இணைக்கும் நகரம்தான் பருத்தி மாநகரமாகும். எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பது போல் ஈழமணி திருநாட்டின் சிரசான பருத்தி மாநகரில் புகழ்பெற்ற துறைமுகத்திற்கு அருகாமையில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சித்திவிநாயகப் பெருமான் புதிதாக அமைக்கப்பட்ட சித்திர திருத்தேர் மீது ஆரோகணித்து வலம் வரும் திருக்காட்சியைக் கண்டு களிப்பதில் அனைவரும் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் திருத்தேரில் பவனி வருதல் புதிதான வைபவம் ஒன்றல்ல. இத்தேர் திருவிழா இவ் ஆலயத்தில் ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன்னரே எமது முன்னோரால் நடாத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. எமது முன்னோர்கள் தேர் அமைக்கும் போது அதற்குரிய சில்லுகளை கருங்கல்லில் செதுக்கி தேர்ச்சில்லாக பாவித்திருக்கின்றார்கள் என்பதற்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட தேர்ச்சில்லுகள் இன்றும் சான்றுபகர்கின்றன.

இவ்வாலயத்தில் மகோற்சவம் நடைபெற்று 9 ஆம் நாளில் விநாயகப் பெருமான் கட்டுத்தேரில் பவனி வருவதாக வரலாறுகள் சொல்கின்றன. இப்படியாக தொடர்ந்து நடைபெற்ற திருத்தேர் விழா 1984 ஆம் ஆண்டு முதல் நடைபெறாது தடைப்பட்டுள்ளதோடு இலங்கையிலேயே அதி சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய கட்டு திருத்தேர் இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் பின்னர் ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மகோற்சவம் நடைபெற்று இவ் ஆண்டு பெருமானுக்குரிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு சித்திவிநாயகப் பெருமான் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் புரிய வாழ்த்துகிறேன்.

அழகான சித்திரத்தேரில் எம்பெருமான் வீதி உலா வரும் கண்கொள்ளா காட்சியினைக் கண்டு களிப்புறுவதோடு அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.


தும்பளை மேற்கு
வரதவிநாயகர் தேவஸ்தானம்
சார்பாக

**செல்வி பரமேஸ்வரி சேதுபதி**


சித்திரத்தேரிற்கான அச்சு வைத்தல் நிகழ்வு







சித்திரத்தேரின் சிற்ப வேலைப்பாடு



# வினை தீர்க்க வந்த
# பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர்
# (பெரிய பிள்ளையார்) வரலாறு

ஒரு நாட்டின் வளமும் சமுதாய நலனும் திருக்கோவிலைப் பொறுத்தே இருப்பதால், "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று, அன்று ஒளவையார் அருள்மொழி புகன்றார். ஒளவையின் அருள்மொழியைப் பிரதிபலிக்குமுகமாகப் பருத்தித்துறையில் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் கோவில் கொண்டெழுந்துள்ளார்.

ஈழத் திருநாட்டின் மணிமுடியாகத் திகழும் பருத்தித்துறை நற்பதியில் கோவில் கொண்டருளியிருக்கும், ஸ்ரீ சித்திவிநாயகரது ஆலயம் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்ற மூன்றிலும் சிறப்புற்று விளங்குகின்றது.

## கொட்டடிப் பிள்ளையார்

இவ்வாலயம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு முந்நூற்றைம்பது வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்தது. இஃது இங்குள்ள ஆலயங்களுக்கெல்லாம் முன்தோன்றிய கோவிலாகும். பெரிய வீதிகளையுடைய விசாலமான கோவிலும் இதுவேயாகையால் இவ்வாலயத்தைப் 'பெரியபிள்ளையார்' கோவில் என்றும் அழைப்பர்.

தற்போது எம்பெருமான் குடிகொண்டிருக்கும் இடத்தில் ஒல்லாந்தர் காலத்திற்கு முன்பே ஒரு சிறிய கேணியும் ஆலயமும் இருந்ததாம். இக் கேணியில் ஸ்நானம் செய்து பெருமானை வழிபட்டே மக்கள் துறைமுகத்திற்கு வேலைக்குச் செல்வார்களாம். மாலுமிகளும் எம்பெருமானை வழிபட்டுத்தான் தங்கள் பிரயாணத்தைத் தொடங்குவார்கள். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நேரடியாகவே வர்த்தகத் தொடர்பு இருந்ததாம். பருத்தித்துறைத் துறைமுக வாயிலாகவே ஈழத்து உப உணவுப் பொருட்கள் தோணிகளிலும் வத்தைகளிலும் ஏற்றப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டன. தென்னிந்தியாவிலுள்ள விசாகபட்டினம், தூத்துக்குடி முதலிய துறைமுகங்களிலிருந்து சொரிநெல் பருத்தித்துறைக்குத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் சைவசமய வழிபாடு தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகிவிட்டது. அக்காலத்தில் இவ்வாலயம்

அழிக்கப்படவே இத்துயரைத் தாங்க இயலாத மக்கள் இந்தியாவிலிருந்து ஒரு விநாயக விக்கிரகத்தைச் சொரிநெல்லிலில் மறைத்துக் களவாகக் கொண்டு வந்தார்கள். இதனை எப்படியோ அறிந்த ஒல்லாந்த சுங்க அதிகாரிகள் சோதனையிட்டனர். அவர்களின் சோதனை பயனளிக்கவில்லை. இறுதியாக தோணியில் வந்த மாலுமிகள் உட்பட அனைவரிடமும் சத்தியம் செய்து கொடுக்குமாறு வேண்டினார்கள். உடனே அவர்கள் "சொரிநெற்களுள் கல்லும் மண்ணையும் தவிர வேறெந்தப் பொருளும் இல்லை" என்று சத்தியம் செய்து கொடுத்தார்கள். இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் பனங்கட்டிக் கொட்டுக்குள் வைத்துப் பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தார்கள். இதன் பயனாக எம்பெருமானுக்குக் "கொட்டடிப் பிள்ளையார்" என்னும் சிறப்புப் பெயர் வழங்கிவரலாயிற்று. நேரடிப் பயனாகவும் நினைவுச் சின்னமாகவும் இவ்வாலயம் அமைந்துள்ளது. இக் கோவிலுக்கென்று கொடித்தம்பம் நாட்டப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இது 1870 ஆம் ஆண்டு என இக் கோவில் வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

**இந்தியக் கலைஞர் பணி**

இவ்வாலயத்தின் இராச கோபுரம் 1925 ஆம் ஆண்டு இந்தியக் கலைஞர்களால் மிக நுட்பமாகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும் கட்டிமுடிக்கப்பட்டது. இன்றும் இக்கோபுரம் பிறநாட்டு மக்களின் கலாரசனைக்கும் மதிப்புக்குமுரியவண்ணமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றது. பருத்தித்துறை நகரின் எவ்விடத்தில் நின்று பார்த்தாலும் இக்கோபுரத்தின் அழகுருவம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. கோபுரத்தின் இருமருங்கிலுமுள்ள கண்டாமணிகளின் ஓசை பல மைல்களுக்கு அப்பால் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

இக்கோவிலில் நடேசர், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, சந்தானகோபாலர், நாகதம்பிரான், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். அத்துடன் 1971 இல் நடந்த கும்பாபிஷேகத்தின் போது ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகமொன்றையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

**தெற்பக் குளச்சிறப்பு**

ஆலயத்தைச் சுற்றி உள்வீதியும் இரண்டாம் வீதியில் தீர்த்தக் கேணியும் பூந்தோட்டமும் மூன்றாம் வீதியில் தெற்பக் குளமும் அமைந்திருக்கிறது. தெற்பக் குளம் இலங்கையில் எப்பாகத்திலும் காணமுடியாத அமைப்போடு அழகுறக் காட்சியளிக்கிறது. ஆண்டுதோறும் உற்சவத்தின் பின் விஷேட உற்சவமாகத்

தெற்போற்சவம் நடைபெறுகிறது.

மாசி மாதத்தில் வரும் அபர பக்கத்துச் சஷ்டித்திதியில் கொடியேறி மாசி மாத அமாவாசையன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவடைகின்றது.

அன்று பனங்கட்டிக் கொட்டுகள் இருந்த இடத்தில்தான் இன்றும் பிள்ளையார் வானளாவிய கோபுரத்தோடு அகன்ற வீதிகளையும் உடைய ஆலயத்தில் காட்சி கொடுக்கின்றார்.

வல்வினையைத் தீர்க்கும் எம்பெருமான் தம் அடியார்க்குச் செல்வத்தையும் அருளையும் அள்ளிக் கொடுத்த வண்ணம் இருக்கின்றார். அத்துடன் பருத்தித்துறை நகருக்கே பெருமையையும் மதிப்பையும் அழகையும் கொடுக்கின்றார் பெரியபிள்ளையார்.

## விநாயகப்பெருமானுக்குரிய பதினாறு வகையான மூர்த்தி பேதங்களும்

| | |
|---|---|
| 1. பால கணபதி | 9. விக்கின கணபதி |
| 2. தருண கணபதி | 10. க்ஷப்ர கணபதி |
| 3. பக்த கணபதி | 11. ஏரம்ப கணபதி |
| 4. வீர கணபதி | 12. இலட்சுமி கணபதி |
| 5. சக்தி கணபதி | 13. மகா கணபதி |
| 6. துவிச கணபதி | 14. விஜய கணபதி |
| 7. பிங்கள கணபதி | 15. நிருத்த கணபதி |
| 8. உச்சிட்ட கணபதி | 16. ஊர்த்துவ கணபதி |

# விநாயக வழிபாடு

இறைவன் எடுத்த எத்தனையோ மூர்த்தங்களுள் சிறந்து விளங்குவது விநாயக மூர்த்தமாகும். அவரது திருவதனமே பிரணவ வடிவமாக அமைந்தமையினால் “பிரசன்னவதனன்” என்னும் சிறப்புப்பெயர் விநாயகருக்கு மாத்திரமே உரிய தனிப்பெயராகும். அந்த இறைவனை வழிபடுவதனாலே கிடைக்கும் பேற்றினை கபிலதேவ நாயனார் ஒரு பாடலிலே குறிப்பிடுகின்றார்.

“திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம் கை”

விநாயகப் பெருமான், தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாத தனிமுதற் கடவுள், அவருக்கு ‘விக்கினேஸ்சுவரர்’ என்ற பெயரும் உண்டு. தன்னை அன்போடு வணங்குபவர்களது விக்கினங்களை எல்லாம் போக்கியருளுவதனால் இப்பெயர் அவருக்கு ஏற்பட்டது. அவரது முகம் யானைமுகம் ஆனமையால் அவரை அத்திமுகவன், ஆனைமுகத்தோன், ஐம்முகன், ஐந்துகரவாரணன், வேழமாமுகன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். ஒரு தந்தத்தை மட்டும் கொண்டிருப்பதனால் ஏகதந்தன், ஹேரம்பன், ஒற்றைவார் மருப்பினன் எனவும் அழைக்கப்படுகிறார். பருத்தவயிற்றை உடையவனாக இருப்பதால் இலம்போதரன் எனவும் பெயர் பெறுகிறார்.

இவை மட்டும்தான் விநாயகருக்கு உரிய பெயர்கள் என எண்ணிவிடக்கூடாது. அவருக்கு எண்ணிலாத நாமங்களுள. “பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமான்” எனவும் “ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ?” எனவும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடுவது விநாயகருக்கும் பொருந்தும். அதற்குக் காரணமும் உண்டு. இறைவனை வணங்கும் அடியவர்களுடைய மனம் அவரவரது மனப்பக்குவத்திற்கு ஏற்பப் பல்வேறு நிலைகளில் திருவுருவ அமைப்பில் ஈடுபாடு கொள்கிறது. மனம் ஒன்றுகிறது; அதனையே எண்ணிக் கரம் கூப்புகிறது. விநாயகரை ஒரு குழந்தையாகக் காணும்போது ‘பாலகணபதி’ என்கிறது; வீர உருவத்தில் காணும்போது ‘வீர கணபதி’, ‘துர்க்கா கணபதி’, ‘மகாகணபதி’ என்றெல்லாம் கூறுகிறது; ஆடல் உருவத்தில் காணும் போது ‘நிருத்த கணபதி’, ‘நர்த்தன கணபதி’ என்கிறது. இவ்வண்ணமே அவரவரது தேவைக்கு ஏற்ப இறைவனை எண்ணி மனம் மொழி மெய்யினால் துதிப்பவனே உண்மையான பக்தனாகின்றான்.

விநாயகர் மிக எளிமையானவர் என்கிறது எமது மதம். 'கோயில்' என்று பெயர் சூட்டி விமானம் அமைத்து கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பதுகூட இல்லாமல், ஆற்றங் கரைகளிலும் அரச மரத்தடிகளிலும் வானம் பார்க்க அமர்ந்திருந்து அருளாட்சி புரிபவராக இருக்கிறார். மஞ்சள் பிடித்து சாணத்திலும் அவரைப் பிடித்து வணங்கிவிடலாம். அறுகம்புல் அவருக்கு உகந்ததாகிறது. இவை யாவும் விநாயகப் பெருமானது எளிமையான வணக்கத்திற்கு எடுத்துக்காட்டுகள் ஆகின்றன.

விநாயகரது திருவுருவம் யானைமுகமும் மூன்று கண்களும் இரு பெரிய செவிகளும் தும்பிக்கையுடன் கூடிய ஐந்து கரங்களும் ஒரு பெரிய வயிறும் இரு குறுகிய திருவடிகளும் கொண்டமைந்தது எனலாம். 'ஓம்' என்பதற்கு உரிய தமிழ் எழுத்தாகிய ஓங்காரம், துதிக்கையுடன் கூடிய யானைமுகம் போன்றிருப்பதும் ஒப்பிடற்கரியதாகும். ஐந்து கரங்கள் பஞ்ச கிருத்தியைச் செய்யும் ஆற்றலுடையவன் என்பதை உணர்த்தும். மூன்று விழிகளும் சோமசூரிய அக்கினிகளை உணர்த்தும். விசாலமான இரு செவிகளும் ஆன்மாக்களை மலமாசுகள் தாக்காமற் காத்து வினைவெப்பத்தைப் போக்கி அருளும் என்னும் உண்மையை உணர்த்தும். பெருவயிறு சர்வ உயிர்களது உற்பத்திக்கும் கர்ப்ப இடமாக எல்லா அண்டங்களையும் உயிர்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறது என்னும் தத்துவத்தை உணர்த்துகிறது. விநாயகப் பெருமானது தோற்ற பேதங்கள் சிலவற்றில், கைகளிலே ஆயுதங்கள் பல வைத்திருப்பதாக உருவகிப்பது வழக்கம். பாசம், அங்குசம், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சூலம் என்பன போன்ற இருபத்தொன்பது ஆயுதங்களது பெயர்கள் குறிப்பிடப்படுவது மரபாகிறது.

"மோதகம்" விநாயகருக்கு விருப்பமான தின்பண்டம் என்பர். இதனால் 'மோதகப்பிரியன்' என்ற பெயரைப் பெற்றார். மா, பலா, வாழை என்னும் முக்கனிகளும் இவருக்கு உகந்தது எனலாம். அதிலும் மாங்கனி மீது அவருக்கிருந்த ஈடுபாட்டை, பெற்றோரை வலம் வந்து முருகனையே முந்திப் பெற்ற மாங்கனியிலிருந்து நாம் அறியலாம். அவருக்கு மிகவும் விருப்பமான நிவேதனப் பொருள்களாக அப்பம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம், நாவற்பழம் என்பனவும் விளங்குகின்றன. அவரை தும்பை, வன்னி, எருக்கு, அறுகு, கொன்றை என்னும் மலர்களால் பூசித்து வழிபட்டால் சித்திகள் பலவற்றை நாம் பெற முடியும்.

இந்துக்கள் இறை தத்துவக் கருத்துக்களை தமக்கு வேறாகப் படைக்கவில்லை. எம். போல தாய், தந்தை, அண்ணன், தம்பி, மாமா என்றெல்லாம் உறவு நிலைகளைப் படைத்தே வணங்கி வருகின்றனர். அத்தகைய அடித்தள மீதில் சுதந்திர உணர்வுடன் பல கதைகளைப் படைத்தும் மனம் மகிழ்ந்தனர். அந்தவகையில் சில உதாரணங்களையும் பார்ப்போம்.

“அரவனிடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன் என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
விகடமேன் செய்தாய் என
மருவும்என் கைந்நீ முழுமளந்தான் என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய்....”

என்ற சிவப்பிரகாச சுவாமிகளது பாடலை உதாரணமாக நோக்குவோம். ஒரு நாள் சர்வேஸ்வரனும் உமையம்மையும் கைலையில் வீற்றிருந்தனர். அப்போது, விநாயகன் தனது முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு வந்தார். காரணம் கேட்க “தம்பியின் தொல்லை என்னால் பொறுக்க முடியவில்லை. எனது காதை சும்மா கிள்ளுகிறான்” என்று பதில் கூறினார். இறைவன் முருகனைப் பார்த்து, “நீ ஏன் அண்ணனின் காதைக் கிள்ளினாய்?” என்று கடிந்தார். “அண்ணா எனது கண்களை எண்ணினார். அதுதான்” என விடை கூறினார் முருகன். உடனே ஈஸ்வரன், “கணபதி நீ செய்த குறும்பை மறைத்துவிட்டு, தம்பியை மட்டும் குற்றம் சொன்னாயே. இது நியாயமா?” எனக்கேட்டார். “நான் ஒன்றும் முதலில் அவன் கண்களை எண்ணவில்லை. அவன் என் துதிக்கையின் நீளத்தை அளந்து முழம் போட்டான்” என்று கூறியதைக் கேட்ட ஈஸ்வரன், மகிழ்ச்சியினால் திளைத்து நிற்கும் தேவியைப் பார்த்து, “பார் உன் அருமைக் குழந்தைகளை” எனக்கூறினார். ஆமாம், இக்காட்சி எமது குடும்ப வாழ்வில் நிகழும் அன்றாட சம்பவமாக அல்லவா இருக்கிறது? இறை உணர்வு, எம் வாழ்வோடு எந்தளவில் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு இது சிறந்த ஓர் ஆதாரம் எனலாம்.

குடும்ப வாழ்விலே குழந்தைகள், பெற்றவர்களை எப்படி நேசிக்க வேண்டும் என்பதை அதிலும் தாய் மீது கொள்ளும் பாசத்தை விநாயகர் ஓரிடத்தில் விளக்கியிருக்கிறார். “திருவிளையாடற் புராணம்” என்னும் நூலிலேயே இவ்வுண்மை இடம் பெற்றுள்ளது. சிவபெருமானது பெருமையை விளக்க நூல் எழுதிய பரஞ்சோதி முனிவர் தம்மை மறந்து விநாயகரது பெருமையைப் புகழ்ந்துவிட்டார். அக்கதையை நாமும் அறிந்திருப்பது நல்லது.

கடற்கரைப் பகுதியிலே வாழ்ந்து வந்தது பரதவக்குலம். அப்பகுதியின் தலைவன் அதியனாயன் என்பவருக்கு நீண்ட நாட்களாகக் குழந்தைப்பேறு கிடைக்கவில்லை. இறைவன் மீது அவர் கொண்ட பக்தி காரணமாக பார்வதிதேவியே மகளாக வந்து பிறந்தார். அக்குழந்தை சிவபெருமானையே கணவனாக அடைய விரும்பி அவரையே வணங்கியும் வந்தது. உரிய காலம் வந்ததும் கடலின் நடுவே சுறா ஒன்று எங்கிருந்தோ வந்தது. மீனவரது பிழைப்பில் மண்ணைவாரிப் போட்டது. தலைவன் யோசித்தான் "சுறாவைப் பிடிப்பவர் எனது மகளை மணந்து கொள்ளலாம்" என அறிவித்தார். எவருமே அதற்கு முன்வரவில்லை. பரமேஸ்வரர், மீனவர் வேடம் தாங்கி வந்தார்; சுறாவை அடக்கினார்; அம்மையைக் கரம்பற்றினார். இத்திருவிளையாடல் எதற்காக நிகழ்ந்தது?

ஒரு நாள் பரமேஸ்வரன் பார்வதி தேவிக்கு வேத உட்பொருளை விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார். அம்மையார் அதனை மனம் வைத்துக் கேளாமையினால் சிவனாலே தண்டிக்கப்படுகிறார். "உயிர்க் கொலைக்கு அஞ்சாத அறிவு நலம் சாராத குடும்பத்தில் நீ பிறக்க வேண்டும்" என ஆணை பிறப்பித்தார். அன்னைக்கு நடந்ததை, அறிந்த பிள்ளையார் ஓடோடி வந்தார். தாயின் நிலைக்காகத் துடிதுடித்துப் போனார். அதற்கு காரணம் எது? அந்த ஏடுகள் அல்லவா? அதனைத் தன் தும்பிக்கையினாலே எடுத்தார்; கடலில் வீசினார். சின்னவன் முருகனும் சீறிப்பாய்ந்தார். அண்ணன் எறியும் போது நழுவிய ஏடுகளை எடுத்து அறிந்தார். யாவும் முடிந்ததும், தந்தையின் கையிலிருந்த 'சிவஞான போதம்' என்னும் நூலையும் கண்டார். அதனையும் பறித்து கடலில் வீசினார். சிவனார் அங்கு காவலுக்கு நின்ற நந்திதேவரை நெருப்பாகப் பார்த்தார். "பூமியில் போய் அறிவற்ற சுறா மீனாகப் பிறந்து வாழ்வாய்" என்றார். தன் கையிலிருந்து எட்டிப் பறித்த முருகனைக் கோபமாகப் பார்த்து "நீ பூமியில் ஓர் ஊமையாகப் பிறக்கக் கடவாய்" எனச் சாபமிட்டார்.

மீனவர் குலத்திலே பிறக்கவும் எளிய வாழ்வு வாழவும் அம்மைக்குச் சாபம். காவல் காப்பதில் தவறிய நந்திக்கு சுறாவாகப் பிறக்கச் சாபம். தட்டிப் பறித்ததால் ஊமையாகப் பிறக்கும்படி முருகனுக்குச் சாபம். இந்தக் கலாட்டா யாவற்றிற்கும் பிள்ளையார் சுழி போட்ட பிள்ளைக்கு எதுவித சாபமும் இல்லை ஏன் தெரியுமா? பிள்ளையாரைச் சபித்தால் அந்தச் சாபம் சிவனையே சென்று சேரும் என்பதைப் பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுகின்றார்.

"வெருவரைசெலவின் வேழமுகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பொற்றியல் சாபம் கூறான்"

என்னும் பாடல் வரிகளே அவை. அம்மா மீதுள்ள பாசத்தால் மேன்மை பெற்றுவிட்டார் விநாயகர். அதனாலேதான் பார்வதி பரமேஸ்வரனின் மூத்த பிள்ளையான விநாயகர் மரியாதையாகப் "பிள்ளையார்" என்று அன்போடும் பக்தியோடும் அழைக்கப்படுவாரானார்.

விநாயக வணக்கத்தோடு தொடர்புபடும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கூட நாம் அறிந்திருக்க வேண்டும். எமது மதத்திலுள்ள எல்லா மந்திரங்களும் தோத்திரங்களும் "ஓம்" என்னும் பிரணவத்தையே முடிமணியாக ஏற்றுக் கொண்டுள்ளன. ஓங்காரத் தத்துவமே எமது மதத்தின் ஆணி வேராகவும் உள்ளது. "ஓங்கார ரூபாய நம;" எனப் போற்றப்படுபவர் நம் விநாயகரே. அவரையே முதல் தெய்வமாகக் கொண்டு ஆலய வழிபாட்டை மட்டுமன்றி சகல கருமங்களையுங் கூடத் தொடங்குகிறோம். அதனால் வெறும் கும்பிட்டு மட்டும் போடாமல் தோப்புக்கரணமும் குட்டும் போட்டு வணங்கி அவரின் வழிபாட்டை அதிகப்படியான வழிபாடாக்குகிறோம்.

"வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச பரி புர பொற்பத அர்ச்சனை மறவேனே"

எனப்பாடும் அருணகிரிநாதரது கூற்று இதற்கு ஆதாரமான கூற்றாக விளங்குகின்றது.

விநாயகருக்குத் தேங்காய் உடைத்து வணங்கும் நம்பிக்கை எம் மத்தியிலுண்டு. அதற்கு ஒரு கதையுமுண்டு. ஒரு முறை விநாயகப் பெருமான் சிவனிடம், "தந்தையே, உம்மை யாவரும் தியாகராஜன் என்று அன்பு பொங்க அழைக்கிறார்களே! நான் எதைக் கேட்டாலும் தியாகம் செய்வீர்களா?" என்று கேட்டார். எம் பெருமானும் "செய்கிறேன்" என வாக்குக் கொடுத்தார். "எனக்கு யானைத்தலை. உங்கள் தலையை எனக்காகத் தியாகஞ் செய்யுங்கள்" என்று கேட்க, பரமேஸ்வரனும் சிறிதும் தயங்காமல் அப்படியே தனது தலையைத் தந்துவிட்டார். விநாயகர் அதைத் தந்தைக்கே திருப்பிக்கொடுத்தும் விட்டார். முக்கண்ணனான எம்பெருமானுக்கு முக்கண் உடைய தேங்காய் ஓர் அடையாளமாகும். எல்லாச் செல்வங்களையும் விநாயகருக்குத் தியாகம் செய்ய வேண்டும் என்ற தத்துவத்திலேயே பரமேஸ்வர ரூபமான தேங்காயை அவர் முன் உடைக்கிறோம். தேங்காய் அகங்காரத்தைக் குறிப்பது. கெட்டியான ஓடு வெண்மையான பளிங்கில் உள்ள இளநீரை அதாவது நம் உள்ளேயுள்ள ஆனந்தத்தை அக்கெட்டியான ஓடு (ஆணவம்) மறைக்கிறது. ஆணவத்தை உடைத்தெறிவதற்கு அடையாளமாகத் தேங்காயை நாம் உடைக்கிறோம். அகங்காரம் அகன்றால் ஓங்காரமாக கணபதி தோன்றுவார் என தேங்காய் உடைப்பதன் தத்துவத்தை

ஸ்ரீ காமகோடி பெரியவர் விளக்கம் கூறியுள்ளார்.

பூரண கும்பம் மங்கலமானது. அதனை வைக்கும்போது முதற்காரியமாகப் பிள்ளையார் பிடித்து வைக்கிறோம். கோலம் போட்டால் அங்கும் பிள்ளையார் பிடித்து வைக்கிறோம். எந்த யாகம் என்றாலும் பூசை என்றாலும் பிள்ளையார் பிடித்து வைத்துவிடுவோம். மஞ்சளினால், சாணத்தினால், மாவினால், மண்ணினால், வெல்லத்தினால் என பிடித்து வைப்பவை யாவுமே பிள்ளையார் ஆகிவிடுகின்றன. மற்றத் தெய்வங்களுக்கு உருவம் அமைக்க வேண்டும். வேண்டுமானால் ஆகம சாத்திரப்படி அதனைச் செய்ய வேண்டும். ஒரு சிறு குறைபாடு இருந்தாலும் அது வழிபாட்டிற்குப் பொருந்தாது. ஆனால் விநாயகருக்கு அப்படி இல்லை. எதைப் பிடித்து வைத்தாலும் தனக்கு மேலே தலைவன் இல்லாதவர் விநாயகர் என்கிறோம். அத்தகையவர் எவ்வளவு எளிமையாக நமக்காக இறங்கி வருகிறார் பாருங்கள். எமக்கு நலங்கள் பல அருளுகிறார். நலன்கள் பல விளைய நல்லாட்சி புரியும் நாயகனுக்கு, ஏதாவது ஒரு காரியத்தை நாம் செய்யும் முன் "முதல் வணக்கம்" செலுத்துவது வழக்கம். அம்மரபில் நாம், கடிதம் எழுதினால் அங்கே பிள்ளையார் பிடித்து வைக்கிறோம்; எப் பூசைக்கும் பிள்ளையார் பிடித்து வைக்கிறோம். அவ்விதம் செய்வதற்குக் காரணம், "வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்" என்பதே ஆகும்.

அன்புப் பரிமாற்றத்தின் மூலம் விநாயகரிடம் பேரம் பேசும் அளவிற்கு ஔவையார் பக்தி கொண்டுள்ளார் துங்கக்கரிமுகத்துத் தூமணியாகிய மகாகணபதியிடம் வெறுங்கையை நீட்டி வேண்டாது, பாலும் தெளிந்த தேனும் பாகும் பருப்பும் படைத்து வைத்து, தனக்கு விருப்பமான இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை அருளும்படி வேண்டுகிறார். அந்தத் தொப்பை அப்பன் வாளா இருந்து விடுவாரா? இல்லையே!

"பாலுந்தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத்தமிழ் மூன்றுந் தா."

நன்றி - தமிழின்பம்

# மகோற்சவ தத்துவம்

ஆகமங்கள் உயர்ந்த ஆன்மிக அனுபவத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறும் பிரமாண நூல்கள். ஆலயங்கள், ஆலயக் கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்ற ஒழுங்கில் கூறுகின்றன. இவற்றின் மூலம் பெறப்படும் உயர்ந்த அனுபவத்தைப் பற்றிச் சித்தாந்த சாத்திர நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. எனவே வாழ்நாளில் சமய அனுபவத்தை வளர்த்துக்கொள்ளும் வகையில் சைவசமயி ஒருவன் ஆகமங்கள் கூறும் கிரியை நெறியில் ஈடுபட வேண்டியவனாகின்றான். ஆலயங்களில் பரார்த்த நிலையில் நிகழ்த்தப்படும் கிரியைகள் பக்தி நெறிக்கும் அனுகூலமானவை. உருவமும், நாமமும் கடந்த முழுமுதற் கடவுளுக்கு உருவமும், நாமமும் கொடுத்து திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து அப் பரம்பொருளை ஆன்மா வழிபடுவதற்குரிய வழிமுறைகளை ஆகமங்கள் வகுத்துள்ளன. இறைவன் வாழ்வுக்குரிய எல்லாக் கருவி கரணங்களையும் தந்தாலும் தானே உடனிருந்து தோன்றாத் துணையாக விளங்கி வாழ்விப்பதாலும் அவனிடத்து நன்றியுடனிருப்பதும் பணிபுரிவதும் அன்பு செலுத்துவதும் நமது கடமையாகின்றது. இறைவனிடத்தே பக்தி பூண்டவன் எனத்தானும் தன்னைக் கருதும் பக்தனொருவன் இவ்வுலகம் எல்லோருக்கும் பொதுவானது என்றும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தலே பக்தியின் உண்மைத் தன்மை என்றும் உணருவான். பக்தனுக்கு இத்தகைய பக்திநெறியின் உயர் தத்துவத்தை உணர்த்துவதே மகோற்சவமாகும்.

"உற்சவம்" என்னுஞ் சொல் ஐந்தொழில்களில் ஒன்றாகிய சிருஷ்டியைக் குறிக்கும் எனக் கிரியை நூல்கள் விளக்கந் தருகின்றன. ஆலயத்தின் கருவறையில் உள்ள மூலவர் "உற்சவ மூர்த்தி" என்ற பெயருடன் ஆலயத்திலிருந்து வெளிவீதியில் பவனி வருதல் உற்சவம் என அழைக்கப்படுகின்றது. ஐந்து நாட்களுக்கு மேல் தொடர்ந்து செய்யும் வீதியுலாவிற்கு "மகோற்சவம்" அல்லது "பிரம்மோற்சவம்" எனப் பெயர் வழங்கப்படுகின்றது. "மக இதி பிரஹ்ம" என்ற பிரமாணத்தினால் மகோற்சவமும் பிரம்மோற்சவமும் ஒரே பொருளைத் தருவன.

உயிர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் வினைத்திட்பத்தால் நல்வினை, தீவினை வயப்பட்டு உழலுகின்ற நிலையில் எல்லா வினைகளையும் திருநோக்கால் அகற்றி ஆணவமான படலங்கிழித்து தன்மயமாக்கும் தனிப் பெருங் கருணைப் பொழிவே உற்சவமென மேலோர் கண்டுவந்தனர். இதன் பிரிவுகள் பலவகைக் கிருத்தியங்களைச் சுட்டியமைவதாகக் கிரியை நூல்கள் விளக்கந் தருகின்றன. அங்குரார்ப்பணம், துவஜாரோகணம், ரக்ஷாபந்தனம், திருக்கல்யாணம் ஆகியன சிருஷ்டி எனப்படும் படைத்தலையும் ஹோமம், பலி, வாகனங்களில் இறைவன் உலாவருதல் என்பன திதியாகிக் காத்தலையும் சூர்ணோற்சவம் ரதாரோஹணம்

ஆகியவை சம்ஹாரம் எனப்படும் அழித்தலையும் மௌனோற்சவம் திரோபாவம் ஆகிய மறைத்தலையும் ஊடல் திருவிழா அனுக்கிரகம் எனப்படும் அருளலையும் குறிக்கும் என்பது சமய நூல்களின் விளக்கமாகும்.

உற்சவமானது யாவருக்குமுரிய தீட்சை காலமாதலால் உற்சவத்தின் பெருமையும் சிறப்பும் அளவிடற்கரியது. இக்காலத்தில் தீட்சை பெறுங் காலத்திலே நடக்க வேண்டிய முறைப்படி அந்த ஊரில் உள்ளவர்களும் அயல் ஊர்களிலிருந்து கோயிலுக்குச் செல்கின்றவர்களும் நடந்துகொள்ளக் கடமைப்பட்டவர்களாவர். உற்சவமானது சாம்பவமென்ற தீட்சை என்று உத்தரகாரணகமம் மகோற்சவ விதிப்படலத்தில் கூறுகின்றது. எம்பெருமான் தீட்சையில் மண்டலம், கும்பம், அக்கினி, ஆசாரியார், சிஷ்யர் ஆகிய ஐந்து இடங்களில் நின்று அருள் செய்பவராவர். சாம்பவி தீட்சையாகிய உற்சவத்திலும் அவ்விதியே ஐந்து இடங்களில் நின்று அருள் புரிபவர். மகோற்சவ காலத்தில் இடம்பெறும் பல்வேறு அம்சங்கள் இந்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன. உற்சவம் சாம்பவி தீட்சைக்குச் சமமெனக் கருதப்படுவதால் ஆகமங்கள் சிறப்பித்துக் கூறும் மகோற்சவங்கள் அடியார்களைப் பொறுத்தவரை சமய அனுட்டானத்திற்குரிய புண்ணியதினங்களாக விளங்குகின்றன.

மகோற்சவ காலத்தில் திருக்கோயில் புதுப்பொலிவு பெற்று விளங்கும். நித்திய கிரியைகளின் போது ஏற்படும் குறைகளையும் லோபங்களையும் நிறைவுசெய்து தெய்வீகப் பொலிவை ஏற்படுத்துவதற்கென மகோற்சவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. மகோற்சவத்தின் போது பிரதான இடம்பெறுவது "துவஜாரோஹணம்" என அழைக்கப்படும் கொடியேற்றம் என்னுங் கிரியையாகும். துவஜாரோஹணத்திற்குரிய கொடிச்சீலை பற்றி இங்கு சிந்திப்பதும் பொருத்தமாகும். கொடியேற்றப்படும் கோயிலையொட்டிக் கொடிச்சீலையில் இடம்பெறும் அம்சங்கள் வேறுபடுவன. சிவாலயமாயின் சிவனுக்குரிய விஷபமும் எம்பெருமானது படைக்கலமான சூலமும் இடம் பெறுவன. விநாயகருக்கு நிகழ்வின் மூஷிகமும் அங்குசமும் இடம்பெறுவன. முருகனுக்குரிய உற்சவமாயின்; மயூரமும் சக்தியும் இடம்பெறுவன. கொடிச்சீலையில் இவற்றுடன் கண்ணாடி, பூர்ணகும்பம் முதலிய அஷ்ட மங்கலப் பொருட்களுடன் சூரியன், சந்திரன் ஆகியோரும் இடம்பெறுபவர்.

மகோற்சவத்திற்கு இன்றியமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அஸ்திரதேவர், பலிபீடம் ஆகிய நான்கினுக்கும் பிரதிஷ்டையின் பொருட்டு உரிய கிரியைகள் நிகழ்வதும் குறிப்பிடத்தக்கது. அஸ்திரதேவர் சிவனது கிரியா சக்தியைக் குறிப்பதாகும். துவஜாரோகணத்தின்போது உற்சவமூர்த்தியை உரியவாறு அலங்கரித்து வலமாகக் கொடிமரத்தின் முன் எழுந்தருளச் செய்தபின் கொடிச்சீலையைக் கோவிலை வலமாகக் கொண்டுவந்து கொடிமரத்தில் உள்ள

கயிற்றில் பிணைத்து "சமஸ்த தேவதாவாஹனம்" என்னுங் கிரியை இடம்பெறுவதாகும். இக்கிரியையின் பொருள் யாதெனில் தேவர்கள் அனைவரையும் எழுந்தருளச் செய்தல் ஆகும். இக்கிரியையில் தெய்வங்கள் அனைவரும் துவஜதண்டத்தில் திருவிழா முடியும்வரை சாந்நித்தியம் கொண்டருளுமாறு வேண்டப்படுவது முக்கிய அம்சமாகும். பின் கொடியை சகல மங்கள வாத்திய கோசங்களுடன் ஏற்றி வலமாகச் சுற்றி தர்ப்பையைச் சுற்றிலும் பரப்பி இணைத்துக் கட்டி அலங்கரித்தபின்பு சிவாச்சாரியர் இதற்குரிய பூஜோபசாரங்களை நிகழ்த்துவார். அபிஷேகம், பலிதானம், தூப, தீபம், அர்ச்சனை, மகாசீர்வாதம் உற்சவேசருக்குரிய பூஜை, பிரமசந்தி முதலான கிரியைகள் உரியவாறு இடம்பெறுவன. திக்குகள் அனைத்திலும் அவ்வத் திக்குக்குரியவரைத் தியானித்து அவரவருக்குரிய வேத மந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் கூடிய ஆவாகனம் நிகழும். சங்கீதம், நாட்டியம் ஆகிய இரண்டும் இக்கிரியையில் விரிவாக இடம்பெறுவது மனங்கொள்ளத்தக்கது.

பிரமோற்சவத்தில் பிரதிஷ்டையிற் போன்று பூர்வாங்கக் கிரியைகளுடன் யாகசாலையோடு தொடர்புடைய கிரியைகளும் முக்கிய இடம்பெறுவன. இந்நைமித்திகக் கிரியை வருடந்தோறும் நிகழும் தன்மையினால் திருக்கோயிலில் யாகசாலைக்கு நிரந்தர இடமுண்டு. இவ் யாகசாலை கோவிலில் கிழக்குக்கும் வட கிழக்குக்கும் இடையில் இடம்பெறுவதாகும். இங்கு மேற்குப்பக்கத்தில் குண்டமொன்று அமைந்து விளங்கும். பிரமோற்சவ காலத்தில் தினந்தோறும் இரு வேளைகளிலும் யாகபூஜையும் துவஜஸ்தம்பத்திற்கு அபிஷேகம், பூஜை, பலியும் திக்குகளில் பலியும் நிகழ்வன. மற்றும் உற்சவமூர்த்திக்கு விசேட அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை முதலியனவும் நிகழும்.

இதனைத் தொடர்ந்து கொடி, குடை, ஆலவட்டம் முதலிய சகல விருதுகளுடனும் வேதகோஷம் திருமுறை ஓதுதல் முதலியவற்றுடனும் திருவுலா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வீதிவலமாக எழுந்தருளி சுவாமி ஈசான மூலையையடைந்ததும் யாகத்தில் பூர்ணாகுதியும் ஆராதனையும் நடைபெறும். மகோற்சவகால விரதகாரர்களுக்கு இக்கிரியைகள் மனநிறைவைத் தருபவை. யாகசாலையில் சிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்திற்கு வரவொட்டாது தூய்மையாக்கும் பாவனையாகும். இறைவனுக்கு லாஜபுஷ்பம் சமர்ப்பித்தலும் தத்துவச் சிறப்பு உண்டு. தூய்மையானதும் வெண்மையானதுமான நெல் மலரைச் சுவாமிக்கு சிவாச்சாரியார் சமர்ப்பிப்பது மல நீக்கம்பெற்ற ஆன்மாக்களைச் சிவத்தோடு சேர்ப்பிக்கும் பாவனையாகும். இறைவன் திருவுலாக் கொண்டருளும் போதும் பூசை நடைபெறும்போதும் எழுந்து நின்று வழிபடாமல் அக்கிரியைகள் நடைபெறும் இடங்களில் அமர்ந்திருப்பவர் யாவரேயாயினும் தெய்வ நிந்தனை செய்தவர்களாவர். மகோற்சவ காலங்களில்

உரியசமய அனுட்டானங்களைப் பின்பற்றி ஒழுகுபவர்கள் மனத்தூய்மை பெற்று சமய வாழ்வுக்கேற்ற நல்ல ஆன்மாக்களாக விளங்க வழிபிறக்கின்றது. மனிதன் தான் எடுத்த பிறவியின் பயனை அடைவதே மகோற்சவம் போன்ற கிரியைகளின் பயன்பாடு எனக்கூறின் மிகையில்லை.

மகோற்சவ தினங்களில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வாகனமும் ஒவ்வொரு வகை அலங்காரமும் இறைவனுக்குரியவை. பத்ததிகளில் இவைபற்றி வரையறுத்துக் கூறப்பட்டிருப்பினும் அவ்வவ் ஆலயங்களுக்குரிய ஐதீகங்கள் வழமைகள் ஆகியவற்றை அனுசரித்துச் சிற்சில வேறுபாடுகள் அனுசரிக்கப் படுகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள திருக்கோயில்களில் மகோற்சவ காலங்களில் சப்பறத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும்.

உற்சவங்கள் அறிவுறுத்தும் அடிப்படைத் தத்துவங்களையும் நாம் அறிந்துகொள்வது பயனுடையதாகும். மகோற்சவ தினங்களில் இடம்பெறும் முதல்நாள் உற்சவம் தூல தேகத்தை நீக்கிக் கொள்வது பயனுடையதாகும். மகோற்சவ தினங்களில் இடம்பெறும் முதல்நாள் உற்சவம் தூல தேகத்தை நீக்கிக் கொளுதற் பொருட்டுச் செய்யப்படுவதாகும். பரம வைத்தியராகிய சிவபெருமான் தூல சூக்குமமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் மருந்தாக நமக்குத் தந்தது மலமாகிய நோயை நீக்கி, அஞ்ஞானத்தைக் கெடுத்து சிவஞானத்தை விளக்கிச் சிவானந்தப்பேறு தந்தருளுதற் பொருட்டேயாகும். இரண்டாம் நாள் உற்சவம் தூலசூக்கும தேகத்தின் வேறாகிய ஆன்மா அத்தேகத்தைத் தன்னின் வேறெனக் கண்டு பற்று நீக்குதல் வேண்டுமெனும் பாவனையாக நடத்தப்படுகின்றது. மூன்றாம் நாள் உற்சவம் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று என்னும் ஏழையும் ஒழித்தற்பொருட்டு நிகழ்த்தப்படுவது. இவ்வேளையும் சற்று விரித்துக் கூறுவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமாக அமையும்.

1. மூவினைகள் - ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் ஆகியன
2. முப்புத்திகள் - ஐயம், விபரீதம், மயக்கம் என்பன
3. முக்குணங்கள் - சாத்துவிகம், இராசதம், தாமசம் ஆகியனவாகும்
4. மும்மனம் - சித்தம், புத்தி, அகங்காரம் என்பன
5. முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம் ஆகியன
6. முப்பிறப்பு - உம்மை, இம்மை, அம்மை என்பன. அவை முறையே கழிந்த பிறப்பு, இப்பிறப்பு, இருபிறப்பு என்பன.
7. முப்பற்று - மண், பெண், பொன் ஆகியன.

மூன்றாம் நாள் உற்சவத்தினால் இவற்றை ஒழித்தற்கு வழியேற்படும். நான்காம் நாள் உற்சவம், மனம், அகங்காரம், புத்தி ஆகிய நாற்கரணமும் அண்டஜம் முதலிய

நால்வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டுச் செய்யப்படுவதாகும். ஐந்தாம் நாள் உற்சவம் மெய் முதலிய ஐம்பொறிகளும் சாங்கிரம் முதலிய ஐந்து மலங்களும் நீங்குதற் பொருட்டு நடைபெறுவதாகும். ஆறாம்நாள் உற்சவம் காமம் முதலிய உட்பகை ஆறும் கலை முதலிய அத்துவா ஆறும் இருத்தல் முதலிய கன்மல குணம் ஆறும் பதமுத்தி ஆறும் நீக்குதல் காரணமாகச் செய்யப்படுவதாகும். ஏழாம்நாள் உற்சவம் வித்தியா தத்துவம் ஏழும் மாயாமல குணம் ஏழும் நீங்கும் பொருட்டு நடத்தப்படுவதாகும். எட்டாம் நாள் உற்சவம் எண்குணங்களும் விளங்குதற்பொருட்டு நிகழ்த்தப்படுவதாகும். ஒன்பதாம் நாள் உற்சவம் மூல வடிவங்களும் முக்கிருத்தியங்களும் மூன்றிடத்துதுறைதலும் இல்லையென்பதைக் குறிப்பதாகும். மூவடிவங்கள் அருவம், அருவுருவம், உருவம் என்பன முத்தொழில் சிருஷ்டி, திதி, சங்காரம் ஆகியன. மூன்றிடத்துறைதல் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்தி மூன்றுமாவன. பத்தாம் நாள் உற்சவத்தின் தத்துவம் மிகவும் சிறப்புடையது. அந்தமில்லாத இன்பத்து அழிவில்லாத வீடாகிய பரமானந்த வெள்ளத்தில் அமிழ்ந்து தற்பொருட்டுச் செய்யப்படுவது இவ்வுற்சவமாகும். வளர்பிறைச் சந்திரன் ஒவ்வொருநாளும் இருளைச் சிறிது சிறிதாக நீக்கி, பூரணையில் முற்றாக நீக்குவது போன்று சிவபெருமான் ஆன்மாக்களிடத்திலுள்ள மலசுத்தியைச் சரியையிற் சரியை முதல் பதினாறு வகைப்பட்ட சிவபுண்ணியங்களுக்கேற்ப அவ்வப் பருவந்தோறும் சிறிது சிறிதாக நீக்கி, நீக்குந் தோறும் நீக்குகின்ற திருவருட் சக்தியைச் சிறிது சிறிதாகப் பதியச் செய்து முதிர்ந்த பருவத்திலே முற்றாக நீக்கிச் சத்தியை முற்றாகப் பதியச் செய்து தாம் பிரிப்பின்றி நிற்றலை அறியவொட்டாது செய்த அறியாமையை நீக்கி அறியச் செய்து, காந்தமானது இரும்பைத் தன்வசமாக்கி ஒருகாலும் விடாத தன்மைபோல ஆன்மாவை விடாது தன்வசமாக்கித் தமது எண்குணங்களை ஆன்மாவிடத்து விளங்கச் செய்து கலந்து நிற்பர். அணையிலுள்ளாகக் கட்டுப்பட்டுத் தேங்கி நின்ற ஆற்றுநீர் அவ்வணையை உடைத்து ஒரு தடையுமின்றி விரைந்து சென்று கடல்நீருடன் கலந்து அடங்கி மீண்டும் வராத தன்மைபோல பாச ஞானத்தில் அடங்கித் தடைப்பட்ட ஆன்மா அத்தடையினின்றும் நீங்கிச் சிவபெருமானுடைய திருவடிகளிற் கலந்து அருள்நிறைவாயடங்கிப் பின்பு மீளுதல் இன்றி பரமுத்தியில் ஆனந்த சொரூபமாய் நிற்கும் தத்துவத்தை உணர்த்துவதாக இவ்வுற்சவம் நிகழ்த்தப்படுவதாகும். இவ்வகையில் உயர்ந்த சைவசித்தாந்த உண்மைப் பொருளை உட்பொருளாகக் கொண்டது. இந்த உற்சவம் ஆகும்.

மகோற்சவத்தில் மிருகயாத்திரை எனப்படும் வேட்டைத் திருவிழாவும் குறிப்பிடத் தக்கதாகும். இதனைச் சங்கார யாத்திரை எனவும் கூறுவர். பன்றி போன்ற ஆணவமலமும் மான்போன்ற கன்ம மலமும் பட்சி போன்ற மாயாமலமும் ஆகிய மும்மலங்களும் ஆன்மாவைச் சார்ந்து நின்று வருத்தும் தீய சக்திகளாகும். அஞ்ஞானத்தை உண்டுபண்ணுகின்ற மும்மலங்களை அடங்கிச் சிவபெருமான்

சாயுச்சியம் கொடுக்கும் குறிப்பாகவே இவ்வுற்சவம் நடைபெறுவதாகும். இதனை எட்டாம் தினத்திற் செய்யலாமென நூல்கள் கூறும்.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களுள் தலையாயது தேர்த்திருவிழாவாகும். ஊர்கூடி தேர் இழுத்தல் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்பது இவ்விழா நாளில் இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருத்தேரின் வடத்தினை அடியவர்கள் தொட்டு இழுத்துக்கடைத்தேற வாய்ப்பேற்படுகின்றது. இறைவனது ஐந்தொழிலைத் தத்துவப் பொருளாகக் கொண்டமைவதே தேர்த்திருவிழா எம்மைப் பீடித்திருக்கும்.

மல பந்தங்களை அழித்து நிறைந்த வாழ்வினை அருளும் திருநோக்கில் இறைவன் தேரிலே இவர்ந்து வருகின்றான். இதனை நாம் ஆக்கந்தரும் நிகழ்வாகக் கொள்ளலாம். தேரின் தோற்றப் பொலிவே தத்துவச் சிறப்புமிக்கது. நான்கு சக்கரங்களையும் தேர்த்தட்டினையும் மேலே அமைந்த விதான அடுக்குகளையும் அவற்றின் உச்சியில் உள்ள கலசத்தையும் அதற்கு மேல் பறக்கும் கொடியினையும் அவதானிக்குமிடத்து, உயிர் இறைவனை அடையச் செய்யும் வழியின் அடிப்படையையும் அதற்கான நெறியின் அமைப்பையும் காட்டி நிற்பதாக நாம் உய்த்து உணரமுடியும். தேரும் தேர் ஓட்டமும் இறைவனது திருவருள் பெருக்கத்தை எமக்கு உணரத் தருவதோடு அவனது திருவடியைத் தொழுது பேரின்ப வாழ்வைப் பெற வழிகாட்டியாக அமைந்து விளங்குவதையும் நாம் உணரலாம். எம்பெருமான் தேரின்மீது ஆரோகணித்து அருள்புரியும் வேளை எம்மைப் பீடித்துள்ள அகங்கார மமகார சிந்தனைகள் சிதறுண்டு போகின்றன. சிவபெருமானின் அட்ட வீரட்டங்களுள் திரிபுரதகனமும் ஒன்று. இதன் காரணமாய் எம்பெருமானுக்கு திரிபுராந்தகர் என்ற திருநாமமும் உரித்தாயிற்று. முப்புரத்தைத் தகனம் செய்ய இறைவன் ரதமேறும் தெய்விக நிகழ்ச்சியைப் புராணங்கள் போற்றுகின்றன. நம்மிடையேயுள்ள அசுரர்களாகிய மும்மலங்களையும் சங்காரம் செய்யும் தத்துவத்தையே இது குறிக்கின்றது. இதன் தத்துவத்தைத் திருமூலர் தமது திருமந்திரத்தில்,

அப்பணி செஞ்சடையாதி புராதனன்
முப்புரஞ் செற்றனனென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரமெய்தமை யாரறிவாரே.

எனக் கூறுகின்றார்.

மகோற்சவத்தில் தீர்த்தத் தினத்தை நிச்சயித்துத்தான் துவஜாரோஹணம் செய்யப்படவேண்டுமென்பது விதியாகும். சமுத்திர தீர்த்தம் திதியைப் பிரதானமாகக் கொண்டதாகும். நதி முதலியவற்றில் கொடுக்கப்படும் தீர்த்தம் நட்சத்திரத்தைப்

பிரதானமாகக் கொண்டது. சௌர உற்சவத்திற்குச் சங்கிராந்தி பிரதானமாகும். சாந்திர உற்சவத்திற்கு திதி பிரதானமாகும். நட்சத்திர உற்சவத்திற்கு நட்சத்திரம் முக்கியமாகும். தீர்த்தோற்சவத்தை உதயத்தில் கொள்வது உத்தமமாகும். மத்தியானத்தில் கொள்வது மத்திமம், அதற்கு மேற்பட்ட காலங்களில் கொள்வது அதமமாகும். பூர்வானத்தில் உதயாதி மூன்று நாழிகை உத்தமமாகும். மூன்று நாழிகைக்குமேல் ஏழு நாழிகை வரையும் கொள்வது மத்திமமாகும். அதன்மேல் பத்து நாழிகைவரை கொள்வது அதமமாகும். ஆறு, குளம், சமுத்திரம் முதலிய இடங்களுக்கு பரமசிவன் திருவுலாக்கொண்டு எழுந்தருளுவது ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் குறிப்பாகும். சிவபெருமானது திருவருட்சக்தி நீர்வடிவாய் அமைந்த தன்னை அடைந்து தரிசித்து நீராடும் அடியவர்களது பிறவியாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து தத்துவாதீதராய் விளங்குஞ் சிவத்துடன் கூடும். தீர்த்த காலத்தில் திருவருள் என்னுந் தீர்த்தத்தை அடைந்து நீராடி மெய்யன்போடு சிவத்தலங்களை வழிபடின் பிறவிக்கு வித்தாகிய மும்மலங்களும் நீங்கி அடியார்கள் சிவானந்த துர்ரியடைவார்கள். தீர்த்தோற்சவம் ஐந்தொழில்களில் அருளலைச் சுட்டும் தீர்த்தோற்சவத்தை அடுத்து சுவாமி வீதிவலம் வந்து கோயிலுக்குத் திரும்பியதும் யாக கும்பங்களை மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்தல் முக்கியத்துவம் பெறும். சிவயாகத்தின் நிறைவின் பொருட்டும் உலகங்களைப் பாதுகாத்தல் பொருட்டும் யாக கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படுகின்றது. மௌனோற்சவமும் உயர் தத்துவப் பொருளைக் கொண்டது. சிவம் மற்றெல்லாப் பொருளிலும் உள்ளும்புறமும் வியாபித்து நிற்பதை அறிந்து எல்லாப் பொருள்களுஞ் சிவமெனக் காணும் அனுபவத்தைத் தருவதாகும். இந்த ஞான நிட்டையை ஆன்மா அடையவேண்டுமென்னுங் குறிப்பாகவே மௌனோற்சவம் நடைபெறுகின்றது.

மகோற்சவத்தின் இறுதி அம்சமாக துவஜாரோகணம், சமஸ்மவேதா விசர்ஜனம், சந்தி விசர்ஜனம், சண்டேசுவர உற்சவம், ஆசார்ய உற்சவம் ஆகியன இடம்பெறும். கொடியிறக்கம் ஐந்தொழில் முடிபையும் ஆன்மாக்கள் முத்தியடைதலையும் விளக்கும். சண்டேசுவரர் உற்சவத்தை பக்தியிடனும் மனஉறுதியுடனும் செய்பவர்கள் சிவோற்சவ பயனை அடைவர். ஆசாரிய உற்சவத்தில் முறைப்படி சிவாச்சாரியாரை மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் சிரத்தையோடு வழிபடுவோர் போகங்களையும் மோட்சத்தையும் அடைவர்.

இவ்வாறு மகோற்சவத்தினால் சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், சிவஞானம் ஆகிய அனுபவங்களை கிடைப்பன. மகோற்சவத்தினால் சாம்பவீதீட்சை பெற்ற பலனை உயிர்கள் பெறுகின்றன. மகோற்சவ தினங்கள் ஒவ்வொன்றும் உயர்த்துவப் பொருளைச் சுட்டி நிற்கின்றன. சிவஞானப் பேற்றைப் பெற்றுய்வதற்கு மகோற்சவம் ஆன்மாக்களுக்கு சிறந்த சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. எனவேதான்

ஆலயங்கள் தோறும் மகோற்சவங்கள் வருடத்திற்கொருமுறை பக்தி பூர்வமாக நடாத்தப்படுகின்றன. ஆலய சிவாச்சாரியர், அர்ச்சகர், பரிபாலகர், வழிபடுவோர் அனைவரும் ஒன்றிணைந்து அனைவரும் சிவனடியார்கள் என்ற உணர்வுடன் நிகழ்த்தப்படுவதே மகோற்சவம். மகோற்சவ தத்துவங்களையும் உட்பொருளையும் உணர்ந்து சிவநெறியில் நிற்க மகோற்சவ புண்ணிய தினங்கள் உறுதுணை புரிகின்றன என்பதை நாம் ஒவ்வொருவரும் இதய சுத்தியுடன் உணர்ந்து அறநெறி நின்று உய்வு பெறுவோமாக.

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
தலைவர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## பதினோராம் திருமுறை பாடியோர்

| பாடியோர் | பதிகம் |
|---|---|
| 1. திருவாலவாயுடையார் | 1 |
| 2. காரைக்கால் அம்மையார் | 4 |
| 3. ஐயடிகள் காடவர்கோன் | 1 |
| 4. சேரமான்பெருமாள்நாயனார் | 3 |
| 5. நக்கீரதேவர் | 10 |
| 6. கல்லாட தேவர் | 1 |
| 7. கபில தேவர் | 3 |
| 8. பரண தேவர் | 1 |
| 9. இளம்பெருமான் அடிகள் | 1 |
| 10. அதிராவடிகள் | 1 |
| 11. பட்டினத்தடிகள் | 5 |
| 12. நம்பியாண்டார்நம்பி | 10 |

# இரதோற்சவம்

மகோற்சவங்கள் பஞ்சக்கிருத்தியங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றன. எல்லா உயிர்களிற்கும் நல்லருளைச் செய்வதற்கு இவற்றை இறைவன் செய்கின்றார். அவ்வகையில்,

| | |
|---|---|
| கொடியேற்றத்திருவிழா | - படைத்தல் |
| வாகனாதி உற்சவங்கள் | - காத்தல் |
| வேட்டை, சப்பறம், தேர்த்திருவிழாக்கள் | - அழித்தல் |
| சூர்ணோற்சவம், மௌனத்திருவிழா | - மறைத்தல் |
| தீர்த்தத்திருவிழா | - அருளல் |

என்றவாறு இடம்பெறுவதைக் காணலாம். இதனையே மாணிக்கவாசக சுவாமிகள் "ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்..." என்று திருவாசகத்திலே குறிப்பிட்டார்.

இவ்வாறான திருவிழாக்களிலே தீர்த்தத் திருவிழா மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இறைவனுடைய பரிபூரணமான கிருபையும் திருவருளும் நிறையக் கிடைக்கின்ற நாளாகும். இவ்வாறு அருள் வழங்குவதற்கு ஏற்ற வகையில் ஆன்மாக்கள் பக்குவப்பட வேண்டும். இதற்காகத்தான் முதல் நாளிலே அழித்தல் திருவிழாவாகிய தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. வேறு எந்தத் திருவிழாவிற்கும் இல்லாதளவிற்கு அடியார்களை அன்று இறைவன் கோயிலிற்கு அழைத்துவிடுகிறான். ஆன்மாக்கள் எல்லோரிடமும் ஆணவம் அநாதியேயுள்ளது. அதனால் ஏற்படும் பொறாமை, வஞ்சனை, சூதுவாது, கோபம், பேராசை, கொலை எண்ணம், களவு போன்ற எண்ணற்ற கெட்ட குணங்கள் அதிகம் ஏற்படுகின்றன. அதேவேளை மாயையால் ஏற்படும் அறியாமையையும் கன்மத்தால் பிறவித்துன்பங்கள் பல இருக்கின்றன. இவைகள் இருந்தால் இறைவன் அருளைத்தர முடியாது. எனவேதான் தேர்த்திருவிழாவிலே எம்மை எல்லோரையும் பங்குபற்றச் செய்து எம்மிடமிருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை நீக்கி ஆன்மாவைச் சுத்தப்படுத்தி அடுத்தநாள் அருளலைத் தருவதற்கு எம்மைத் தயார்ப்படுத்துகின்றார். தேர்த்திருவிழாவன்று இவையெல்லாம் இறைவனால் பிடுங்கி எறியப்படுவதால்தான் நாம் எல்லோரும் அதாவது சிவாச்சாரியார் தொடக்கம் சாதாரண அடியவர்வரை எல்லோரும் களைப்படைந்து விடுவதனை அவதானிக்கலாம்.

இந்த அழித்தற் தொழிலை இறைவன் வேட்டைத் திருவிழாவன்று தொடங்கிவிடுகிறார். அன்று இறைவன் ஊர்தோறும் வலம்வந்து கோயிலிற்கு வராதவர்களுடைய மிருகத்தனமான குணங்களைக்கூட அழித்துவிடுகின்றார். இதேபோல் சப்பறத்தினைப் பார்த்தால் அது இராஜகோபுரத்தினை நினைவூட்டும் அதே வேளை ஆணவம் மேலோங்கி நிற்பதையும் குறிக்குமென்பர். அந்த நாளில் எமது

மேலோங்கிய ஆணவ குணத்தை இறைவன் தேய்வடையச் செய்ய ஆரம்பிக்கின்றார். எனவே வேட்டை, சப்பறத் திருவிழாவில் ஆணவம் வலிகெட ஆரம்பிக்கின்றது. சக்திநிபாதம் படிப்படியாக ஏற்படுகின்றது என்பது உண்மையாகும். தேர்த்திருவிழாவின் போது ஆணவம் முற்றாக வறுத்த வித்துப் போல வலிகெடச் செய்யப்படுகின்றது.

தேர்த்திருவிழா என்றதும் ஆதியிலே முப்புரங்களை அழிக்க சிவபெருமான் புறப்பட்ட கதையே மூலமாக உள்ளது. கருணையே வடிவான சிவபெருமான் மந்தர சேகரி மலைகளை அச்சாகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், ஆறிருதுக்களை சந்தியாகவும் பதினான்கு லோகமும் பதின்நான்கு தட்டுகளாகவும் ஆகாயம் ஆசனமாகவும் உதயாத்த மலைகள் கூவிரமாகவும் நதிகளும் நாதங்களும் கொடிகளாகவும் நட்சத்திரங்கள் விதானமாகவும் மோக்ஷலோகம் மேல் விரிவாகவும் யாகங்கள் சட்டங்களாகவும் நாள் முதலியன இடுக்குமரமாகவும் அட்ட மலைகள் தூண்களாகவும் அட்ட யானைகள் தாங்குபவனவாகவும் சப்த சமுத்திரங்கள் திரைச் சீலைகளாகவும் கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும் கலைகள் முளைகளாகவும் வேதாங்க உபாங்க மநுசாஸ்திரங்கள் மணிகளாகவும் வாயுக்கள் படிகளாகவும் நான்கு வேதங்கள் பூட்டப்பட்ட குதிரைகளாகவும் அமைக்கப்பட்ட இரதத்திலே எழுந்தருளி கங்கை முதலிய கணிகை மகளிர் நடனஞ் செய்யவும் மகா மேருமலையை வில்லாகவும் சரஸ்வதியை வில்லில் கட்டிய மணியாகவும் வாசுகியை நாணாகவும் விஷ்ணுவைப் பாணமாகவும் அக்கினிதேவனை அவ்வம்பின் கூர் வாயாகவும் வாயு தேவனை அம்பிறகாகவும் கொண்டருளிபிரமனாகிய சாரதி பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த திரிபுர அவுணர்களை தன்திருப்புன்னகையால் நீறாக்கியருளினார்.

இங்கே முப்புரம் என்பது மும்மலமே என்பது திருமூலர் திருமந்திரவாக்காகும்.

“அப்பணி செஞ்சடையாதி புராதனன்
முப்புரஞ் செற்றனனென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறிவாரே”

இவ்வகையிலே இரதோற்சவமானது மும்மலங்களையழித்து அருளைப் பெறுவதற்கு ஆன்மா தயார்ப்படுத்தப்படுகின்றது. இதனால்தான் தேர்த்திருவிழாவின் போது சுவாமி உக்கிர ரூபராக செந்நிற ஆடையணிந்து முன்பின்னாக அசைந்தாடி இராஜத குணம் மேலோங்கிய நிலையில் வசந்த மண்டபத்திலிருந்து தேரிற்கு எழுந்தருளுவதனையும் நாம் அவதானிக்கலாம்.

தேரானது பல தத்துவங்களை உள்ளடக்கிய அமைப்புடையதாகும். தேரின் முக்கிய உறுப்புக்களாக சங்கரங்கள், தேர்ப்பண்டிகை, பீடம், தேரின் பரப்பு, தேரின்

முடி, உச்சிக்குடை, தேர்த்தளங்கள், சிற்பங்கள், யாழிகள் போன்றன அமைகின்றன. மேலும் தேரிலே அண்ட சொரூபம், பிண்ட சொரூபம் எனும் இரு அம்சங்கள் உண்டு.

**தேரின் அண்ட சொரூபம் :**

நான்கு சக்கரங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சைவ நன்மார்க்கங்களையும் குறிப்பன. இந்த நான்கு படிகளில் ஒன்றில்தான் ஆன்மாக்கள் உருள்வன. கடைப்பிடித்து இறைவனை அடைவன.

**கீழண்டம் :** ஆன்மாக்களின் உபாயச் சரியா, கிரியா, யோக, ஞான மார்க்கங்களைக் குறிப்பது. கீழண்டத்தில் பாதாளலோக வாழ்க்கை, மண்ணுலக வாழ்க்கை, விண்ணுலக வாழ்க்கை சித்திரிக்கப்பட்டிருக்கும் தேரின் சிறகளின் மேல் மூன்று பிரதான தளங்கள் அமையும்.

முதலாவது தளம் - பாதாள உலகத்தைக் குறிக்கும் - இதில் பாதாளலோக சித்திரங்களான நரகவேதனைக் காட்சிகள் சித்திரிக்கப் பட்டிருக்கும்.

இரண்டாவது தளம் - மண்ணுலகைக் குறிக்கும் - இதில் மண்ணுலக வாழ்க்கைச் சித்திரங்களான அரச கொலு, ஏர் உழுதல், காமச் சித்திரங்கள், கிருங்காரக் காட்சிகள் என்பன இடம்பெற்றிருக்கும்.

மூன்றாவது தளம் - விண்ணுலகைக் குறிக்கும் - இதில் தெய்வேந்திரசபை, அரம்பையர், கின்னரர், கிம்புருடர், காமதேனு, கற்பகதரு, தெய்வக் காட்சிகள் என்பன இடம்பெறும்.

பீடம் - சுவாமியின் இருக்கை - ஆன்மாக்களின் இருதய பீடத்தைக் குறிக்கும் - இதயத்தில் இறைவனை இருத்தினால் ஆன்மாக்கள் திருவருள் விளக்கத்தைப் பெறுகின்றது என்பதையும் குறிக்கும். மேலும் பீடத்திலே சுவாமி இருக்கும் போது சகல உலகங்களிற்கும் அதிபதியானவர் என்பதையும் எல்லா உலகங்களையும் இயக்குபவர் என்பதையும் குறித்து நிற்கின்றது.

எமது வாழ்க்கையில் இன்பம் துன்பம், மேடு பள்ளம், உயர்வு தாழ்வு என்பன அமாவாசை பூரணை போல மாறி மாறி வரும் - அவ்வாறு வாழ்க்கைத் தேர் மேடுபள்ளமென செல்லாது ஒரே நிலையில் சமச்சீராகச் செல்ல வேண்டுமானால் எமது இருதய பீடத்தில் இறைவன் என்றும் இருக்க வேண்டும் என்பதையும் தேர் எமக்குக் காட்டுகின்றது.

**மேலண்டம் :** ஆன்மாக்களின் உண்மைச் சரியா, கிரியா மேள ஒளி மார்க்கத்தைக் குறிக்கும். மேலண்டத்தில் சிவ வாழ்க்கைச் சித்திரங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கும்.

சிவலோக வாழ்க்கைச் சித்திரங்கள் - தெய்வத் திருக்காட்சிகள், தெய்வங்கள், திருக்கைலாய காட்சி, தெய்வ திருநடனங்கள் என்பன இடம்பெறும்.

கலசம், முடி - ஆன்மாதான் என்றொரு பொருள் வேறு தோன்றாதவாறு பதியில் லயப்பட்டு நிற்றலைக் குறிக்கும்.

உச்சிக் குடை - திருவடி நிழல் - ஆன்மாதான் என்றொரு பொருள் இல்லையாய் இறைவனின் சர்வ வியாபகத்துள்தான் அடங்கி சிவானந்தப் பேரின்ப வாழ்வு வாழ்தலைக் குறிக்கும். இது பரமுத்தி நிலை - இரண்டற்ற தன்மையை உணர்த்தும்.

எனவே தேரின் உண்மைத் தத்துவத்தை நோக்கும்போது ஆன்மாக்களாகிய நாம் உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் ஆகிய இரு மார்க்கங்களில் ஒரு மார்க்கத்தில் நின்று சுழல்வதையே தேரின் கீழண்டத்தையும் மேலண்டத்தையும் தாங்கும் சரியா, கிரியா, யோக, ஞான மார்க்கங்களாகிய நான்கு சில்லுகளும் உணர்த்துகின்றன. உபாய மார்க்கத்தை அனுட்டிக்கும்போது எமது அவாவின் விரிவையும் பாதாள பூலோக விண்ணுலக வாழ்க்கையின் விரிவையும் சிற்றின்ப துன்ப நுகர்ச்சிகளையும் தேரின் கீழண்டம் உணர்த்துகின்றன. தேரின் பீடம் ஆன்மாக்கள் திருவருள் விளக்கம் பெறுவதைக் குறிக்கிறது. அவ்வாறு திருவருள் விளக்கம் பெற்றபோது எமது அவாவெல்லாம் ஒடுக்க நிலையாகி சிவலோக வாழ்வையும் பேரின்ப நிலையையும் நோக்கி நிற்கும் முறையைத் தேரின் மேலண்டம் புலப்படுத்துகிறது. தேர்முடி ஆன்மாதானென்ற ஒரு பொருள் தோன்றாதவாறு பதியோடு லயப்படுவதைக் காட்டுகிறது. உச்சிக்குடை பதியின் வியாபகத்துள் லயப்பட்ட ஆன்மா திருவடி நிழலில் சிவானந்தப் பேரின்பமுறும் நிலையை உணர்த்துகிறது.

**தேரின் பிண்ட சொரூபம் :**

கால்கள் - சக்கரங்கள் (சில்லுகள்) இரு கால்கள், தச வாயுக்கள் என்பனவாகும்.

முதலாமடுக்கு - பண்டிகை - ஆர். கீஜண்டம் அச்சு - மூலாதாரம், குண்டலினிசக்தி, பஞ்சபூதங்கள் என்பவாகும்.

அதன் மேற்பகுதி - சுவாதிஸ்டானம் அதன் மேற்பகுதி - மணிபூரகம் - நாபித்தாளம், தசேந்திரியம் என்பன.

**முண்டம்** : அதன்மேற்பகுதி - ஐந்தவத்தை, ஐந்து கோசம், இராகாதி குணங்கள் என்பன.

பீடம் - அனாகதம், இருதளய தானம், இறைவி சக்தி மூர்த்தமாக எழுந்தருளியிருக்குமிடம்.

கழுத்து - மேலண்டத்திற்கும் கீழண்டத்திற்கும் இடைப்பகுதி

விசுத்தி - கழுத்து தானம்

அந்தக் கரணங்கள் - குத்துக் கால்கள்

முற்றுறைகள் - கண்கள்

பிற்றுறைகள் - சிகைகள்

பக்கத்துறைகள் - இருசெவிகள்

பீடம் - முதற் பதிப்பாய் - இடப்பகுதியிலுள்ள இரு குதிரை வடிவங்கள் இடப்பாக சந்திர சூரிய கலாவாசிகள்.

வலப் பகுதியிலுள்ள இரு குதிரை வடிவங்கள் 8 வலப்பாக சந்திர சூரிய கலாவாசிகள் (நான்கு குதிரைகளையும் நான்கு வேதங்களாகவும் கொள்ளலாம்) சாரதி வடிவம் - மும்மலரூபமும் நாசியுமாம்.

**தலை** : மூன்றாமடுக்கு - புருவ மத்தி (மேலண்டம்)

நான்காமடுக்கு - இல்லாடமத்தி

ஐந்தாமடுக்கு - மஸ்த காந்த ஸ்தானம்

ஆறாமடுக்கு - மஸ்தக மத்திய ஸ்தானம்

ஏழாமடுக்கு - சோட சாந்த தானம்

உச்சிக்குடை - பிரமதந்திரம்.

எனவே சக்கரங்களாகிய தச வாயுக்களை நிறுத்த அசைதல் முதலிய விளைவுகள் ஒழியும் சீலர்கள் தம் மனத்தை முறையே மேலாக விளங்கும் உந்திக் குண்டலினியிலிருந்து நாபிக்கும் பின் இருதயத்திற்கும் அங்கிருந்து கண்டம், வாய், நாசி, இருகண்கள் இவைகளின் வழியாய் மேல் நோக்கி லயப்படுத்தி அங்கிருந்து புருவ மத்திபத்திலும் அங்கிருந்து ஏனைய அடுக்குகளாகிய மஸ்தக அந்தம், மத்தி, ஆதித் தானங்களிலும் துவாத சந்தத்திலும் லயப்படுத்தி அங்கிருந்து உச்சிக்குடையாகிய பிரமரந்திரத்திலேற்றி லயப்படுத்தி, பரமானந்த நிலையாக வேண்டும் என்பதைத் தேர் அறிவுறுத்துகின்றது. இத்தத்துவத்தை நீ தேர்ந்து கொள் என்ற கருத்துப்படவே தேர் எனவும் அழைக்கப்படுகின்றது.

தேர் உணர்த்தும் இன்னொரு வகை தத்துவங்களாக,

தேர்ச்சில்லிலுள்ள நான்கு சிங்கங்கள் - லோபரூபரம், சர்வவித ஆசைப் பெருக்க சங்கற்ப விருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார போப விகாரம் என்னும் நான்குவித காம விருத்திகளைக் குறிக்கும்.

எட்டுயாளிகள் - அஞ்ஞானம், அபிமானம், ராகாதி குணங்கள், துக்கம், விடய வாசனை, நானாவித கன்மம், உபாதி, அவஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்களைக் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| கொடிகள் | - | தத்துவக் கூட்டங்கள் |
| மணிகள் | - | பீஜ மந்திர பிரணவாதி சத்தங்கள் |
| குஞ்சங்கள் | - | எண்பத்து நான்கு லட்ச யோனிபேதங்களில் மாறி மாறித் தோன்றும் மரணாவஸ்தையைக் குறிக்கும். |

எனவே சிங்கங்களையொத்த தர்ம விருத்திகளையும் யாளிகளைப் போன்ற அனுபவங்களையும் கொடிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும் மணிகளைப் போன்ற வாக்கொலிகளையும் குஞ்சரங்களைப் போன்ற மனச் சஞ்சலங்களையும் இல்லையென்னும்படி செய்து சித்திரத்தீபம் போல நின்று போன சாட்சாக்கார நிலையை அடைய வேண்டுவதைத் தேர்த் தத்துவம் உணர்த்துகிறது.

தேர்த்திருவிழாவானது ஊர் ஒற்றுமையைக் காட்டி நிற்பதையும் சிறப்பாக அவதானிக்கலாம். தனிய ஒருவரோ அல்லது சிலரோ சேர்ந்து இழுத்தால் தேர் நகரப்போவதில்லை. ஊர் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி வடம்பற்றி இழுக்கும் போது தேர் நகர்கின்றது. இறைசிந்தனையுடன் வடம் பிடித்து வாழ்வு கேட்கின்றோம். - "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்ற உண்மை புலனாகிறது. சமூகத்தில் எல்லோரும் ஒன்றுகூடி பரஸ்பர புரிந்துணர்வுடன் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதையும் தேர் உணர்த்துகிறது. தேர்த்திருவிழாவின் போது விநாயகரை வழிபட அட்டதிக்குப் பாலகர்கள், தேவாதி தேவர்கள், முனிவர்கள், மகான்கள் எல்லோரும் கோயிலிற்கு வருகின்றனர். அவ்வேளை நாமும் கூடி பக்தியால் உருகி வழிபடும் போது எல்லாவகை நன்மைகளும் ஏற்படுகின்றன.

சுபம்.

**சைவப்புலவர் மாறன் ஐயா**

## தோல்வி

தோல்வி குறித்து மனமே, நீ துயரடையாதே, தோல்வியினின்று நீ கற்றுக்கொள்ள வேண்டிய தனிப்பாடம் ஒன்றுண்டு. தோல்வியினின்று நீ பெறுகின்ற ஞானத்தையும் நல்லறிவையும் வேறு யாருமே உனக்கு வழங்கமுடியாது. தோல்வியை நீ துருவியாராய்ந்தால் உன்னுடைய வீழ்ச்சியை நீ விசாரித்துப்பார்த்தால் மெய்யறிவு என்னும் பொக்கிஷத்தை அதனுள் நீ காண்பாய். இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகும்.

# தேர்களின் அமைப்பும் தேரோட்டத் தத்துவமும்

## அறிமுகம்

இந்துசமய மரபிலே கலைகள் முக்கியமானதொரு இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. கலைகள் என்ற பிரிவுக்குள் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் ஆகியவைகள் முக்கியமாக அடங்குகின்றன. இந்தச் சிற்பக் கலைக்குள் அடங்குவதே விக்கிரகவியற் கலையாகும். இத்தகைய சிற்பக் கலையின் பிறிதொரு அம்சமே வார்ப்புக் கலையாகும். இத்தகைய கலைகளின் அழகை புராதன காலத்தில் இருந்தே காணமுடிகின்றது. இத்தகைய கலைகள் அழகானதும் அர்த்தமுள்ளதும் பரஞானத்துவம் உடையதுமாகும். எங்கே நிலையான இன்பம் உடைய பொருள் யாதொன்றுள்ளதோ அதனையே கலைகள் அனுபவத்தில் உணர்த்த முயல்கின்றது என E.P.Havel என்பவர் குறிப்பிடுகின்றார்.

இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் கலை பற்றிக் குறிப்பிடும் போது "கலையானது தன்னலமும் பழிபாவமும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்ல வல்லது" என்கின்றார். அதாவது ஆன்மீகப் பொருளைச் சடப்பொருளில் காட்டுவது கலைகளின் சிறப்பு ஆகும். இவை உயிர்த் துடிப்புள்ளவை. இக் கலைகளின் உயிரோட்டம் இருக்கின்றமையால் தான் இந்துக் கலையின் பகுதியான விக்கிரகவியல் நிலைபெற்று விளங்குகின்றது. எனவே இத்தகைய கலைகளை வளர்த்துப் பெருமையுறச் செய்வதில் மதமும் முக்கியமானதொரு காரணியாகும்.

## தேர்களின் அமைப்பு

இவ் வகையில் விக்கிரகக் கலைகள் வரிசையில் "தேர்" இந்துக் கலைகளின் பெருமையை உலகறியச் செய்யும் வகையில் அமைக்கப்பட்ட ஒரு வடிவமாகும். தேர்கள் பல வகைப்பட்டவையாயினும் அவற்றின் உருவ அமைப்பில் அதிக வேற்றுமை காணப்படவில்லை. தேர்களில் மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் போன்றவைகளும் ஆலயங்களில் காணப்படுகின்றன. தேர்களில் மிகச் சிறந்த சிற்ப வேலை செய்து பதிக்கப்படுகின்ற உருளை நான்கு முதல் பத்து வரை எண்ணிக்கையில் வேறுபடலாம்.

தேர்களைப் பெரும்பாலும் தாமரை மொட்டு வடிவிலேயே அமைத்தனர் என ஊகிக்க முடிகின்றது. தேரிலே கொடுஞ்சி என்ற உறுப்பும் அமையப் பெற்று இருந்தது. பெரும்பாலும் தேர்கள் மரத்தினாலே ஆக்கப்பட்டிருந்தது. ஆரம்ப காலம் தொட்டு

இற்றைவரை ஆலயத்தோடு தொடர்புடைய நிர்மாண வேலைகளுக்கும் மற்றும் சிற்பங்கள், வாகனங்கள் என்பவற்றை உருவாக்கவும் முக்கிய பொருளாக மரமே பயன்படுத்தப்பட்டது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு.

1. ஏனைய பொருட்களை விட மரத்தில் சிற்பங்களை உருவாக்குது எளிதானது.
2. மரத்தினை மிக இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பது.

காமிகாகமம் "பிரதிமாலட்சண விதிப் படலத்தில் உருவங்கள் செய்வதற்குரிய பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. "கல், மண், இரத்தினம், இரத்தினத்தில் இருந்து உற்பத்தியான பொருள், தாதுக்களில் இருந்து உற்பத்தியான பொருள் ஆகியவையும் இறைவனை உருவாக்கப்ப பயன்பட்ட போதும், இறைவனைத் தாங்கும் வாகனம் செய்வதற்கு முக்கிய பொருளாக மரமே பயன்பட்டது.

சந்தன மரம், சம்பக மரம், சாலம் என்னும் மராமரம், கருங்காலி, அசோக மரம், பனிச்ச மரம், பழமுண்ணிப்பாலை மரம், இலுப்பை மரம், பத்மக மரம், ஏழிலைப் பாலைமரம், வெண் கருங்காலி மரம் ஆகிய மரங்கள் சிற்பங்கள் செதுக்க மிகவும் உகந்தவை. இவை நல்ல நிலங்களில் உண்டாகியவைகளாக இருப்பதோடு, பசையும் வலிமையுமுள்ளதாக இருத்தல் வேண்டும். இதேபோன்று கிளைகள் மிகவும் குறைவாக இருக்கும் மரமும் மொட்டை மரங்களும் காய்ந்த பொந்துகள் உள்ள மரங்களும் தானாகவே கீழே விழுந்த மரங்களும் இலை, பூ இல்லாத மரங்களும் ஏனைய விதங்களில் பழுதடைந்த மரங்களும் கோயில்களில் உள்ள மரங்களும் பிரயாணிகள் தங்கும் மரங்களும் இத்தகைய சிற்பத் தேவைகளுக்குப் பயன்படுத்தலாகாது.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள ஆலயங்களில் மரச் சிற்பங்களைவிட மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தி கருங்கல்லினால் செய்யப்படுகின்றன. எனினும் தேர் மரத்தில் செய்யும் மரபு காணப்படுகின்றது. கோயில்களில் மரத்தினாலான சிற்ப மரபு பேணப்படுவது அக் கோயிலுக்குரிய மூர்த்தி பிரமோற்சவ காலங்களில் வீதிவலம் வரப் பயன்படும் தேரிலாகும். தேரின் அமைப்புக்கும் கோயிற் கட்டிட அமைப்புக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. சுருக்கமாகக் கூறினால் தேர் என்பது சக்கரங்களோடு அமைக்கப்பட்ட ஒரு கோயில் எனக் கூறினால் அது மிகப் பொருந்தும். குறிப்பாகக் கோயிற் கோபுரத்திற்கும் தேருக்கும் இடையில் நேரடித் தொடர்புண்டு. கோபுரம் ஓரிடத்தில் நிலைத்து நிற்பதாகும். தேர் இறைவனைத் தாங்கிய வண்ணம் வீதி வலம் வருவது தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமையுணர்த்தும் சிற்பங்கள் பல புராணக் கதைகளைக் கூறுகின்றன. ஆகவே தேரில் உள்ள சிற்பங்களில் புராதனக் கலை அம்சங்களைக் காணமுடிகின்றது.

இவ்வகையில் அமையப் பெறும் தேர் கோயில்களில் முதலிடம் பெறுகின்றது. இருதலக்ஷணம் கூறும் சிற்பநூல்கள் தேரின் சில்லுகளைப் பற்றியும் கூறுகின்றன. தேரின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு தேர்கள் ஏழு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சதுர வடிவான தேர் நபஸ்வன் பத்ரகம் என்றும் அறுகோண வடிவான தேர் பரபாஞ்சன பத்ரகம் என்றும் பெயர் பெறும். விதானபத்ரகம், பவன பத்ரகம், பிருஹத பத்ரகம், சந்திரக பத்ரகம், அநில பத்ரகம் என்பன ஏனைய ஐவகைத் தேர்களாகும்.

தேர் யுத்தத்திற்குச் செல்வதற்காக அரசர்களாலும் பயன்படுத்தப்பட்டது. அத் தேருக்கு மூன்று சில்லுகள் உண்டு. சில ஆலயங்களில் நித்தியோற்சவத்துக்கும் தேர் உண்டு. அதற்கு ஐந்து சில்லுகள் உள்ளன. மகோற்சவத்திற்குரிய தேருக்கு ஆறு முதல் பத்து வரை சில்லுகள் இருக்கும். இதனையொட்டித் தேரின் வேதிகளின் எண்ணிக்கையும் வேறுபடும். சிவனுக்கு தேருக்கு ஒன்பது வேதிகைகள் கூறப்பட்டுள்ளன. ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகைகள் உரியன.

இவ்வகையில் தேர் செதுக்கி முடிந்ததும் மயிற் பீலி கைகளாலும் சாமரங்களாலும் சிறிய மணிகளாலும் கண்ணாடிகளாலும் தோரணங்களாலும் விசிறி மாலைகளாலும் மேற்பகுதி அலங்கரிக்கப்படும். இவ்வாறு கோயிலிலே அமையும் இறைவனது திருவுருவங்கள் கல்லினாலும் உலோகத்தாலும் அமைவது போல இறைவனைத் தாங்கி வீதிவலம் வரும் தேர்கள் ஏனைய வாகனங்கள் மரத்தால் உரிய முறைப்படி செய்து அழகாக வர்ணம் தீட்டப்படுகின்றன.

## தேரோட்டத் தத்துவம்

பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் எல்லாம் தத்துவார்த்த விளக்கங்களுடன் செய்யப்பட்டன. இந்து சமயம் காட்டும் வாழ்வியல் நெறிகள், கிரியைகள், சடங்குகள் என்ற ஒவ்வொன்றிலும் தத்துவக் கருத்துக்கள் பொதிந்திருப்பதைக் காணலாம். ஆலயங்களில் இடம்பெறும் நித்திய, நைமித்தியக் கிரியைகள் போன்றனவும் தத்துவார்த்தம் நிரம்பியவை. இதே போன்று இரதம் என்று அழைக்கப்படும் தேர் ஓட்டமும் தத்துவக் கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே அடக்கியுள்ளது.

தேர் என்பது யாக்கை அல்லது தேகம் என்ற கருத்தினைக் குறிக்கின்றது. இதன் அடிப்படையில் தேரோட்டம் என்பது வாழ்க்கையைக் குறிக்கின்றது. மனித வாழ்க்கை ஒவ்வொரு விடயத்தையும் படம்பிடித்துக் காட்டுவனவாக இவை அமைந்துள்ளன.

தேரின் அமைப்பு ஆறு அங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. நான்கு சக்கரங்கள்
2. கீழ் அண்டம்
3. தட்டு அல்லது பீடம்
4. மேலண்டம்
5. கலசம் அல்லது முடி
6. குடை

அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு படிகளில் மனித படிகளையும் நான்கு சக்கரங்களும் குறிக்கின்றன. இந்த நான்கு படிகளிலும் ஈடுபடும் பொழுது ஆசாபாசங்களும் மன மயக்கங்களும் வந்து முட்டுக்கட்டைகளாகக் குறுக்கிட்டு மனித வாழ்க்கையைத் திசை திருப்பி விடுகின்றன. இதையே சறுக்குக் கட்டைகள் போட்டு, தேரோட்டத்தைத் தடைப்படுத்தும் நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

தேரின் கீழ் அண்டத்தில் வாழ்க்கையின் பல்வேறு ஈடுபாடுகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்களுள் காம விகாரத்தை விளக்கும் சிற்பங்களே அதிகமாகும். மனித வாழ்க்கையைச் செல்லென அரிக்கும் காமக் குரோதங்களைக் கடந்து நாம் உயர்ந்து ஒரு பீடத்தை அடைய வேண்டும் என்பதே இது குறிக்கும் தத்துவமாகும்.

மூன்றாவது அங்கமான தட்டு அல்லது பீடம் நமது இதய மண்டலத்தைக் குறிக்கும். இதன் பொருள் யாக்கையோடு அமைந்த வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு இதயத்தில் இறைவனை இருத்த வேண்டும் என்பதாகும். இறைவனே யாக்கையை இயக்கும் உயிர். இறைவன் ஏறியதும் தேர் ஓடுகின்றது. இறங்கியதும் தேர் ஓட்டம் முடிந்துவிடும். இதே போன்று யாக்கையில் உயிர் இயக்கமும் நடைபெறுகின்றது என்பதை இத் தத்துவம் விளக்குகின்றது.

தேரின் மேல் உள்ள அண்டம் வாழ்க்கையின் உன்னத இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் குறிக்கும். இலட்சியங்கள் எப்படியிருந்த போதிலும் அவையனைத்தும் கலசமாகிய முடியை நோக்கி ஒன்று குவிகின்றன. இவ்வாறு ஒன்று குவியும் போது ஆத்மசாந்தி என்ற நிழல் வாழ்க்கையில் கிட்டுகின்றது என்பதைக் கலசத்துக்கு மேலேயுள்ள குடை விளக்குகின்றது. வாழ்க்கையாகிய தேரோட்டம் நிகழ்ந்து கொண்டு இருந்தாலும் இதய பீடத்தில் இறைவனை ஏற்றி ஜன்ம சாபல்யத்தை நோக்கி மனம் குவிந்து நிஷ்காமியமாகக் காரியங்கள் ஆற்றுபவனுக்கு ஆத்ம சாந்தியாகிய குடை நிழல் கூடவே செல்கின்றது என்பதையே தேரோட்டம் தத்துவார்த்தமாக விளக்குகின்றது.

தேர் வடிவம் சரீரமாகவும் அதில் காணப்படும் நான்கு சிங்க வடிவங்களும் ஆன்மாவின் சர்வவித சீவ காருண்யமில்லா லோபகுரூரம், சர்வவித ஆசைப்பெருக்க

சங்கற்ப விருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார கோபதாப விகாரம் என்னும் நான்கு வித தர்ம விருத்திகளையும் குறிக்கின்றது. இவ்வகையில் தேர் என்பது வாழ்க்கையின் தத்துவங்களையும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களையும் நீக்கி, ஆன்மா பதியாகிய இறைவன் தாளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு வாழும் வகையை விளக்குகின்றது.

**தேரின் உறுப்புகள்**


தேரின் ஏனைய உறுப்புகளும் ஒவ்வொரு தத்துவத்தை விளக்குகின்றது. தேரில் உள்ள பூதப்பார், கன்னிலப்பார், கபோதப்பார், ஆனைத்தொட்டிப்பார், அச்சப்பார், அச்சப்பூத்தலைப்பார், பூத்தலைப்பார், அசுவதைப்பார் (இரண்டாவது நிலம்), சிம்மப் பூத்தலைப்பார் (மூன்றாவது நிலம்), நாகத் தலைப்பார், விஸ்தாரப்பார், தேவாசனம், சிம்மாசனம், கம்பங்கள், பண்டிகை, கர்ணக்குடம், மணிமுடி போன்ற பகுதிகள் குறிக்கப்பட்ட சில நோக்கங்களின் அடிப்படையில் அமைந்திருக்கும்.


இதில் பூதப்பார் என்பது அச்சின் மேல் உள்ள பாகத்தைப் பூதங்கள் தாங்குவது போன்ற அமைப்பில் அமைக்கப்பட்டதாகும். இதே போன்று தேவாசனம் என்பது தேவர்கள் கடவுளை நின்று தரிசிக்கும் இடம் என்ற முறையில் அமைக்கப்பட்டதாகும். சிம்மாசனமானது கடவுள் வீற்றிருக்கும் ஆசனமாகும். சித்திர வேலைப்பாடமைந்த குத்துக்கால்கள் கம்பங்களாகும். இவ்வகையில் தேரின் உறுப்புகள் பல கருத்தை உணர்த்தி நிற்கின்றன.

இவ்வகையில் கலைகளின் உன்னதமான வளர்ச்சியை, குறிப்பாக விக்கிரகக் கலையின் சிறப்பை தேரின் வடிவம் எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் வாகனங்களின் கலை மரபும் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியன. இந்து சமய மரபிலே ஒவ்வொரு தெய்வங்களுக்கும் ஒவ்வொரு வாகனம் அமைந்து காணப்படுகின்றது. வாகனங்களின் கலை மரபைப் பற்றி விரிவாக ஆராய்வதன் மூலம் இந்து நுண்கலைச் சிறப்பினை நாம் உணர முடிகின்றது. இந்து மதத்தைப் பொறுத்தவரையில் நுண்கலைகளின் சிறப்பிடமாக விளங்கியவை ஆலயங்களாகும். ஆலயங்களில் எல்லாவிதமான கலைகளின் அம்சங்களையும் காணமுடிகின்றது. எனவே கலைகளின் வளர்ச்சியில் ஆலயங்களின் பங்கு அளப்பரியது எனலாம்.

Dr.Mrs.Jeyaluxmy Rasanayagam
Senior Lecturer
Dept. of Education,
University of Jaffna.

சித்திரத்தேர் உருப்பெறுகின்றது...





சித்திரத்தேர் தரிப்பிட மண்டபம் அமையப்பெறுகின்றது....



# அன்பின் வழியது உயர்வு

'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்

எள்ளத் தனைய(து) உயர்வு'

என்பது திருவள்ளுவரின் அருள்வாக்கு.

மானிட வாழ்க்கை என்பது ஒரு வட்டம். அது ஒரு சிறிய காலம். இக்காலத்தில் எத்தனை எதிர்பார்ப்புகளை நாம் வேண்டி நிற்கின்றோம். அவ் எதிர்பார்ப்புளினூடு நாம் எவ்வளவு சந்தோசமாக இருக்கிறோமோ அதை பிறர் எமக்காக தருவதில்லை. நல்ல சிந்தனைகளை வலுப்படுத்தி நாங்களே தேட வேண்டும். வாழ்க்கையில் உயரவேண்டும் என்றுதான் எம்மில் பலபேர் நினைக்கிறோம். எமது உள்ளத்தைப் பக்குவப்படுத்துவதன் ஊடாக உயர்வை அடையலாம் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. அந்தப் பண்பைத்தான் மேற்கண்டவாறு வள்ளுவர் பெருமான் கோடிட்டுக் காட்டுகின்றார். வெள்ளத்தின் அளவுக்குத் தக்கவாறு நீராம்பல் அளவு நீட்டம் பெறுவதைப் போல உள்ளத்தின் உயர்வுக்கு தக்கவாறு வாழ்க்கை உயர்ந்துவிடும் என்கிறார் வள்ளுவர்.

உள்ளத்தின் பக்குவம் அன்பினிலே அறியப்படுகின்றது. இவ்வுலகத்திலே ஒருவன் ஆசை கொண்டிருந்தால் அன்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. மாறாக அன்பு இருந்தால் ஆசை உண்டாவதற்கு வழியில்லை. அன்பும் ஆசையும் இருவேறு துருவங்கள். மற்றவனிடம் இருக்கும் ஒரு பொருளை நமக்காக்க வேண்டும் என்கிற குறுகிய நோக்கத்திற்கு பெயர் ஆசை. நம்மிடம் இருப்பதை மற்றவனுக்கும் கொடுக்க வேண்டும் எனும் பரந்த மனோபாவத்திற்கு பெயர் அன்பு. ஆகவே ஒருவன் அன்பை கொண்டிருக்க வேண்டுமானால் ஆசையை விலக்க வேண்டும். இதை சம்பந்தர்,

"ஆசையறாய் பாசம் விடாய்..." எனும் பாடலில் அழகாகக் கூறினார். எனவே இவ்வுலகில் உயர்வைக் காண விரும்பினால் அன்பினூடாக உள்ளத்தைப் பக்குவப்படுத்த நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் எத்தனையோ சமயங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்துகின்றன. அத்துணை தொனிப்பொருட்களின் அடிநாதமான அன்பை ஆழப் பதித்த சமயம் நம் சமயம் அத்தகு சைவத்தில் சைவசமயிகளாக நாம் உதித்திருக்கிறோம். ஆகையால் அன்பு நெறிக்கு கட்டுப்பட்டு ஒழுக வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. அன்பு நெறியின் கண் வாழ்ந்து ஆண்டவனை உணரத் தலைப்பட வேண்டும் என சைவம் வலியுறுத்துகின்றது. இதன் அர்த்தம் ஆழமானது. அதாவது ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி

ஆகியவற்றினால் அறியமுடியாத இறைவனை அன்பு கொண்டு உணரமுடியும் என்பதாகும். அதனையே மணிவாசகரும் சிவபுராண நிறைவில் வலிறுயுத்துகிறார்.

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வச் சிவபுரத்தில் உள்ளார்..."

இவ்வன்பு நெறி சைவசமயத்தின் ஒரு கண்ணான பெரியபுராணத்தின் அடிநாதமாகும். மூன்று படிநிலைகளில் ஒரு சைவசமயி அன்பைப் பின்பற்றி உயர்வடையலாம் என பெரியபுராணம் எடுத்தாளுகிறது.
முதலாவது மனிதன் மனிதனுக்கு மேல் காட்டும் அன்பு.
இரண்டாவது மனிதன் விலங்குக்கு மேல் காட்டும் அன்பு.
மூன்றாவது மனிதன் கல்லுக்கு மேல் காட்டும் அன்பு.

ஒரு மனிதன் சக மனிதன் மேலும் மிருகங்களின் மேலும் அன்பு காட்டும் பண்பை விளக்குவதற்கு சமயங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் கல்லுக்கு மேலும் அன்பு காட்டலாம் என்று விதித்து வைத்தது நம் சமயம். இது சைவ சமயத்திற்கு உரித்தான தனிச்சிறப்பாகும்.

இம் மூன்று படிநிலைகளையும் பெரியபுராணம் வாயிலாக ஆராய முற்படும்போது பல வியத்தகு சிந்தனைகளை நாம் உணரக் கூடியதாகவுள்ளது. மனிதன் மனிதனுக்கு மேல் அன்பு காட்டினான் என்பதற்கு பல வரலாறுகள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு சந்தர்ப்பம் ஞானசம்பந்தர் சீடர்களோடு இருக்கிறார். பக்கத்திலே ஓர் இல்லத்தில் இருந்து அழுகுரல். ஒரு பெண் அழுகிறாள். காரணம் கணவனைப் பாம்பு தீண்டிவிட்டது. அறிகின்றார் சம்பந்தர். அவன் உடலை எடுத்து ஆலய வாசலில் போட்டார். சிவபெருமானுடன் சண்டை செய்கிறார். "உனக்கென்ன அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை... இவள் அழுவது கேட்கவில்லையா..." "சடையாயெனுமால் சரணியெனுமால்..." என்று பாடி முடிப்பதற்குள் பாம்பு தீண்டியவன் எழுந்துவிட்டான். இதுவே அன்பின் முதற்படி. தனக்கு பரீட்சயமில்லாத பெண்ணுக்காக இரங்கினார் ஞானசம்பந்தர். சிவபெருமான் அருள்செய்தார். இது மனிதன் மேல் காட்டிய அன்பு. இதற்கு ஒரு படி மேலே போகிறார் சேக்கிழார்.

அதாவது மனிதன் விலங்குக்கு மேல் காட்டி அன்பு. மனுநீதி கண்ட சோழன் மகன் வீதிவிடங்கன் தேரிலே போகிறான். இரு பக்கமும் காவலர்கள். அவதானமாக தேரோட்டுகின்றான். எனினும் எங்கோ இருந்து ஒரு ஆண் கன்று அவன் தேர்க்காலில் விழுந்து இறந்து போகிறது. செய்தியறிந்து தாய்ப்பசு கதறியது. தாய்ப்பசுவின்

துயரமறிந்தான் மன்னன். உடனே விபத்து நடந்த இடம் போகின்றான். நன்றாக ஆராய்கின்றான். ஆண் கன்று காலினால் நடந்து வந்தது. என் மைந்தனோ இரத்தில் வந்திருக்கின்றான். இவ்வுலகத்தில் ஆண்டவன் எமக்குத் தந்த ஆற்றலை விட ஒரு படி மேலே போனாலும் அதனூடாக மற்றவனுக்கு தீங்கு ஏற்பட்டால் நாம் பொறுப்பாளிகள் ஆவோம். அதாவது எமக்கென இறைவன் கொடுத்த அதி உச்ச வேகம் கால்கள். இவ்வுண்மையை நிலைநாட்டிய மன்னன் தன் கன்றை இழந்து தவிக்கும் தாய்ப்பசுவின் துயரத்தில் தான் பங்கெடுக்க எண்ணி தன் மகனைத் தேரினால் கொல்ல முனைந்தான் என்று சேக்கிழார் பாடியிருக்கிறார். விலங்குக்காக படி இறங்கி அன்பு கொண்டு தன் மகனையே மாய்க்க முற்பட்ட மன்னனின் மனப் பக்குவத்தைக் கண்ட மாந்தர்கள் எங்ஙனம் மனம் விம்மி அழுதார்கள் என்பதை சேக்கிழார்

"தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு
தரியாது மண்ணவன் மழை பொழிந்தார்..."

என்று உள்ளுணர்வோடு குறிப்பிடுகின்றார். இதுவே மனிதன் விலங்கிடத்தில் காட்டும் அன்பு.

மனிதன் விலங்கு என்பவை உயிருற்றன. ஆனால் கல் என்பது ஜடம். அதற்கு மேலேயும் அன்பு காட்டினான் ஒருவன். இது தான் நமது சமயத்தின் உச்ச நிலைப் பண்பு. கண்ணப்பர் திருக்காளத்தி மலைமேல் சிவலிங்கத்தை காண்கிறார். உடனே அதற்கு உணவு படைக்கிறார். காவல் காக்கிறார். அன்பு மிகுதியால் ஆனந்தம் பெருகி வரும் வேளை இறைவனின் கண்ணில் இருந்து இரத்தம் பாய ஆரம்பிக்கின்றது. தன் கண்ணைப் பிடுங்கி வைக்கிறார். திடீரென்று மறு கண்ணிலும் இரத்தம். தனது மறு கண்ணையும் பிடுங்க புறப்படும் சமயம் இறைவன் "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப" என்று தடுக்கிறார். இது ஒரு சாதாரண விடயம் அல்ல என்பதை சேக்கிழார் நன்றாக வியக்கிறார். கண்ணப்பனைப் போன்றவனது உயர்ந்த அன்பை ஏற்றுக் கொண்ட இறைவா என்னைப் போன்ற சாதாரண ஒருவனுடைய அன்பையும் ஏற்றுக் கொண்டாயே! என்னே உன் கருணை எனும் தொனியை "கண்ணப்பதோர் அன்பின்மை கண்டபின்..." என்று பாடி அதனை வான் கருணை என்று சிறப்பித்தார் மணிவாசகர்.

ஆட்டம் அசைவு எதுவும் இல்லாத சடப்பொருளாகிய கல்லின் மேல் ஒரு வேடன் அன்பு காட்டினான். இதுவே எமது சமயத்தின் அதி உச்சநிலைப் பண்பு.

மனிதனுக்கு மேல் மிருகங்களின் மேல் மட்டுமல்லாமல் கல்லுக்கு மேலேயும் அன்பு காட்டலாம் என்று கூறிய சமயத்தில் நாம் பிறந்திருக்கிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள். நான் வாழ நினைப்பது போல இவ்வுலகத்தில் மற்றவனும் வாழ வேண்டும் என்ற அன்புப் பக்குவத்தை உங்கள் மனதில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

"... பொக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு நக்கு நிற்பர் அவர் தமை நாணியே" என்று அப்பர் சுவாமி குறிப்பிட்டதை போல அன்பில்லாமல் செய்ய வழிப்படுகின்ற எந்த ஒரு வழிபாட்டையும் இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டான். அன்பு எம்மை வாழ வைப்பது மட்டுமல்லாமல் இன்னொருவனுக்கு கைகொடுத்து அவனின் நிறைகுறையில் எம்மைப் பங்கெடுக்கத் தூண்டும். அத்தகைய அன்பை மானிட வாழ்வில் என்றைக்கு நாம் முழுமையாக சேர்த்துக் கொள்வோமோ அன்றைக்கே மனப்பக்குவம் உண்டாகி வாழ்க்கையில் உயர்வை ஏற்படுத்த இறையாசி எம்மை நாடி வரும்.

சுபம்

**சைவப்புலவர் மாறன் ஐயா**

## ஆன்றோர் அமிர்தம்

கடவுளின் பேராற்றல் மெல்லிய பூங்காற்றில் இருக்கிறது.
புயற் காற்றில் அல்ல.

பிறர் குற்றங்களைக் கண்டு தண்டிக்கு முன்
உன்னிடமுள்ள பாரிய குற்றங்களைக் காண்.

உன்னிடம் வேலை பார்த்தவனின் வியர்வை
உலர்வதற்கு முன் அவன் கூலியைக் கொடு.

தாயைப் பார்த்து பெண்ணெடு, தரத்தை பார்த்துப் முதலிடு,
நிலத்தைப் பார்த்து பயிரிடு.

சாவில் பல ஒன்றாகும் வாழ்வில் ஒன்று பலவாகும்.

தினமும் நாம் செய்யும் வேலை தான் நமக்கு உற்ற தோழன்.

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ தீமையாவது செய்யாது இரு.

சுகத்தைக் கண்டு மகிழாதே அது துக்கத்தின் ஓர் வித அலங்காரம்.

துன்பங்களை உன்னிடம் குடி வைக்காதே
அது உன்னை இறுதியில் அழித்து விடும்.

எழுந்திரு! விழித்திரு! கருதிய கருமம் கைகூடும் வரை உழைத்திடு.

# நன்றி

பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான பெரிய பிள்ளையாருக்குரிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று சிறப்பாக நடைபெற்று வரும் நிகழ்வைக் கண்டு பேரானந்தம் அடைகிறோம். தேரின் வனப்பை, சிறப்பை கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அடியார்கள் அனைவரும் பூரிப்படைந்துள்ளனர். இச்சிறப்புக்குக் காரணமானவர்கள் அனைவரையும் கௌரவித்து, பாராட்டி, நன்றி தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

குறுகிய காலத்தில் ஆசிச்செய்தி அனுப்பிய குருமார்கள், சமயப் பெரியார் களுக்கும் வாழ்த்துச் செய்தி தந்த பிரதேச செயலர், கல்வியியலாளர்கட்கும் ஆக்கங்கள் படைத்துதவிய கல்வியுலகத்தார்க்கும் பெருமானின் ஆசி கலந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

சித்திரத்தேர் திருப்பணிச்சபை, தேவஸ்தான பரிபாலனசபை, சிற்பாசாரியார்கள், வர்ணக் கலைஞர்கள் ஆகியோருக்கும் பெருமானின் ஆசி கலந்து நன்றிகள் உரித்தாகட்டும்.

இத்திருப்பணிக்கான நிதிப் பங்களிப்பை வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் பெருமானின் ஆசி கலந்த நன்றிகள்.


இச்சித்திரத்தேர் வெள்ளோட்ட மலரை யாத்தவர்களுக்கும் பெருமானின் உற்சவ, சித்திரத்தேர் அமைப்பு புகைப்படங்களை படம்பிடித்த குகன் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தார்க்கும் இம்மலரை சிறந்த முறையில் அச்சேற்றிய வியாபாரிமூலை சிவா ஓவ்செற் பிறின்ரேர்ஸ் நிறுவனத்தார்க்கும் பெருமானின் ஆசி கலந்த நன்றிகள்.


சிறப்புப் பிரதிகள் பெற்று இன்றைய வெள்ளோட்ட விழாவிற்கு மேலும் மெருகூட்டிய பெருமானின் மீளா அடியவர்களுக்கு அவரின் ஆசி கலந்த நன்றிகள்.

நன்றி

செயலாளர்
**சித்திரத்தேர் திருப்பணிச்சபை**

பழைய தேரின் தோற்றம்







சிவா ஒவ்செற் பிறின்ரேர்ஸ் - வியாபாரிமூலை, பருத்தித்துறை. 0771114512